
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MARCH 03, 2023

வெள்ளிக்கிழமை மார்ச் 03, 2023 | ஒளி: 08 கதிர்: 221 | பக்கம்:09 | நகரப்பதிப்பு | FREE



## கச்சத்தீவு திருவிழா இன்று

கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா இன்று (03) ஆரம்பமாகவுள்ளது.

திருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

கச்சத்தீவு திருவிழாவில் கலந்துகொள்ளும் பக்தர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் மற்றும் பக்தர்களுக்கான உணவுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



# கடன் பேச்சில் பங்களிக்க தயார்

### சீன வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் தெரிவிப்பு

கடன் பேச்சுவார்த்தையில் ஆக்கபூர்வமான பங்களிப்பை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக சர்வதேச நாணய நிதியத்திடம் சீனா தெரிவித்துள்ளது என சீன வெளியுறவு அமைச்சின் செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

'ஆக்கபூர்வமான முறையில்' அதிக கடன்பட்ட நாடுகளுக்கு உதவ பலதரப்பு முயற்சிகளில் பங்கேற்க சீனா தயாராக உள்ளது என்று சீன பிரதமர் லீ கெகியாங் தெரிவித்தார் என்று, சீனா மத்திய தொலைக்காட்சியில் இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நிங் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மார்ச் 7 வரை நிலநடுக்கம்




மார்ச் 7ஆம் திகதி வரை கடுமையான நிலநடுக்கம் ஏற்படும் என்று நெதர்லாந்து புவியியலாளர் ஃபிராங்க் ஹூனர்பெர்க் நேற்று (02) கணித்துள்ளார். இதனை ஈராக் புவியியலாளர் சலின் அமாதியும் உறுதி செய்துள்ளார்.

இது பூமியின் மேலோட்டத்தின் வலுவான இயக்கங்கள் காரணமாக நிலநடுக்கம் உணரப்படும் என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, ரிக்டர் அளவுகோலில் 2.5 முதல் 5.4 வரையிலான 49 நிலநடுக்கங்கள் மார்ச் 1ஆம் திகதியன்று ஆங்காங்கே ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யாசகரிடமிருந்து குழந்தையை அபகரித்த குழுவுக்கு வலை

பெண் யாசகரிடம் இருந்து சுமார் ஒன்றரை வயது நிரம்பிய கைக்குழந்தையை மூவரடங்கிய குழுவொன்று அபகரித்துச் சென்றுள்ள சம்பவமொன்று கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2



## களமிறங்கினார் மஹிந்த

அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்ள விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்நிலையில் தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, தேசிய தேர்தல் ஆணைக்குழுவுக்கு விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

இந்நிலையில் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்களை இணைத்துக் கொள்ள விண்ணப்பம் கோரும் பணி முடிவுற்றுள்ளதாகவும் புதிய உறுப்பினர்கள் விரைவில் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.



## சிறுமி துஷ்பிரயோகம்; ஆசிரியர் கைது

பத்து வயது சிறுமியான பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், அந்தப் பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எஹலியகொட பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றின் ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த எஹலியகொட பொலிஸார், அந்த ஆசிரியருக்கு 46 வயதாகும் என்றனர்.

தொடர்ச்சி P2

## ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளது



இலங்கை மத்திய வங்கி நேற்று (02) வெளியிட்ட நாணய மாற்று விகிதத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு மற்றும் விற்பனை விலை முன்னைய தினத்துடன் ஒப்பிடுகையில் மேலும் குறைந்துள்ளது.

மத்திய வங்கி நேற்று (02) வெளியிட்ட நாணய மாற்று விகிதத்தில் ஐக்கிய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 343.97 ரூபாயாகவும் விற்பனை விலை 356.73 ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.

தொடர்ச்சி P2




## சீன சுற்றுலாப் பயணிகள்...

சீன சுற்றுலாப் பயணிகள், இலங்கைக்கு மீண்டும் சுற்றுலா செய்வதில் ஆர்வம் காட்டியுள்ளனர். 2023 ஆம் ஆண்டு முதன்முறையாக 117 சீன பிரஜைகள், ஏழு நாள்கள் சுற்றுலா மேற்கொள்வதற்காக ஸ்ரீ லங்கன் விமான சேவை விசேட விமானத்தின் ஊடாக, மார்ச் 1ஆம் திகதி இரவு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களை, சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ, வெளிநாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய, இலங்கைக்கான சீன தூதுவர் ச்சீ சங் ஹோங் ஆகியோர் வரவேற்றனர்.



## பருமனானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

இலங்கையில் அதிக எடை மற்றும் பருமனானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எடை அதிகரிப்பால் பிற்காலத்தில் தொற்றா நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக அமைச்சின் தொற்றா நோய் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் சாந்தி குணவர்தன கூறுகிறார்.

உலக உடல் பருமன் தடுப்பு தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் 'விழிப்புடன் இருப்போம்; பருமனில் இருந்து விடுபடுவோம்' என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு, விசேட வைத்திய நிபுணர் டொக்டர் சாந்தி குணவர்தன இந்தக் கருத்துகளை வெளியிட்டார்.

தொடர்ச்சி P2

## கிழங்கு, வெங்காயம் விலையில் சரிவு

கொழும்பு, புறக்கோட்டை மொத்த விற்பனை சந்தையில் சில பொருட்களின் மொத்த விலையில் சரிவு பதிவாகியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.



கடந்த வாரம் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 130 ரூபாயாக காணப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 95 ரூபாயாக காணப்படுவதாக அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## மருமகன் தாக்கி மாமியார் பலி; மனைவியின் நிலை கவலைக்கிடம்

■ க. அகரன்



வவுனியா, பெரிய உலுக்குளம் பகுதியில் மருமகனின் தாக்குதலுக்கு உள்ளாகி மாமியார் சம்பவ இடத்திலேயே பலியாகியதுடன், படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் மனைவி அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம், நேற்று (02) காலை இடம்பெற்றுள்ளது.

தொடர்ச்சி P2

## வரி ஏய்ப்பில் ஈடுபடின் சிக்கல்




வரி ஏய்ப்பில் ஈடுபடுவோரை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

தங்களது வருமானத்தை மறைத்து, வரி ஏய்ப்பில் ஈடுபடும் நபர்களை அடையாளம் காண நடவடிக்கை எடுக்குமாறு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்துக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## திகதியை தீர்மானிக்க கூடுகிறது ஆணைக்குழு



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதியை தீர்மானிப்பது உள்ளிட்ட தேர்தலுக்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக தேர்தல் ஆணைக்குழு இன்று (03) கூடவுள்ளது.

இதனிடையே, உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்கள் குறித்து கலந்துரையாடுவதற்காக அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் ஆணைக்குழுவிற்கு இடையில் பெப்ரவரி (28) விசேட கலந்துரையாடல் இடம்பெற்றதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# யாசகரிடமிருந்து குழந்தையை அபகரித்த குழுவுக்கு வலை

பெண்ணொருவரும் ஆண்கள் இருவருமே அந்த யாசகரிடமிருந்த கைக்குழந்தையை பலவந்தமாக பிடுங்கி, ஓட்டோவொன்றில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

இந்த சம்பவம், கடந்த 28 ஆம் திகதியன்று இடம்பெற்றுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் அந்த பெண் யாசகர் பம்பலப்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

பம்பலப்பிட்டியவில் உள்ள நிறுவனம் ஒன்றுக்கு முன்பாக பிச்சை எடுத்துக்கொண்டிருந்த பெண்ணிடம் இருந்த கைக்குழந்தையே கொம்பனிவீதியில் வைத்து இவ்வாறு அபகரித்துச் செல்லப்பட்டுள்ளது.

சம்பவ தினத்தன்று பம்பலப்பிட்டியவில் பிச்சை எடுத்துக் கொண்டிருந்த போது ஓட்டோவில் வந்திறங்கிய மூவரடங்கிய குழுவினர், அந்தக் குழந்தைக்கு ஆடைகளை வாங்கி தருவதாகக் கூறி, அப்பெண்ணையும் ஓட்டோவில் ஏற்றிக்கொண்டு தெமட்டகொடை பிரதேசத்துள்ள ஆடை விற்பனை நிலையத்துக்குச் சென்றுள்ளனர்.

அங்கு ஓட்டோவுக்கான வாடகை கட்டணத்தை செலுத்தி ஓட்டோவை அவ்விடத்தில் இருந்து அனுப்பி வைத்துள்ளனர்.

புடவை கடைக்குச் சென்றவர்கள் சுமார் 1,900 ரூபாய்க்கு ஆடைகளை குழந்தைக்காக கொள்வனவு செய்துள்ளனர். அதனை குழந்தைக்கு உடுத்திவிட்டதன் பின்னர். அங்கிருந்து மற்றுமொரு ஓட்டோவில் ஏறி, கொம்பனி வீதிக்கு வந்துள்ளனர்.

அங்குள்ள ஹோட்டல் ஒன்றுக்கு முன்பாகவிருக்கும் வாகன தரிப்பிடத்துக்கு ஓட்டோவை செலுத்திச் சென்றுள்ளனர். ஆட்டோவில் இருந்த பெண், கைக்குழந்தை தன்னிடம் தாருமாறும் தான் தூக்கிக்கொண்டு வருவமாகவும் யாசகரிடம் (பெண்) கேட்டுக்கொண்டுள்ளார்.

எனினும், அதற்கு அந்த பெண் யாசகர் ஒப்புக்கொள்ளவில்லை. அப்போது அப்பெண்ணுடன் வந்திருந்த ஆண், யாசகரை தாக்கி ஓட்டோவில் இருந்து கீழே தள்ளிவிட்டுள்ளார். தன்னை சுதாகரித்துக்கொண்டு எழும்புவதற்கு முன்னர், அவர்கள் கைக்குழந்தையுடன் தப்பியோடிவிட்டனர்.

பெண் யாசகரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தார்.

தன்னுடைய குழந்தை இல்லாது அந்த பெண் யாசகர் கதறி அழுதுகொண்டிருக்கின்றார் என்றும் தெரிவித்த பொலிஸார், குழந்தையை கடத்தியவர்கள் தொடர்பில் எவ்விதமான தகவல்களும் கிடைக்கவில்லை. எனினும், குழந்தை பாக்கியம் இல்லாத ஜோடியே இந்தக் குழந்தையை கடத்தியிருக்கவேண்டும் என்றும் சந்தேகம் எழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




# கடன் பேச்சில் பங்களிக்கத் தயார்

“சம்பந்தப்பட்ட நாடுகளின் கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சீனா பங்கேற்கத் தயாராக உள்ளது" என்று சர்வதேச நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டலினா ஜார்ஜீவாவுடன் புதன்கிழமை (01) இடம்பெற்ற தொலைபேசி கலந்துரையாடலில் கூறியுள்ளார்.


“அனைத்து தரப்பினரும் கூட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் சமமான சுமையை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று சீனா கூறுகிறது,"

இலங்கை மற்றும் பாக்கிஸ்தான் போன்ற கடன் சுமையில் உள்ள நாடுகளுக்கு ஒரு முக்கிய கடன் வழங்கும் நாடான சீனா, இறையாண்மைக் கடனை மறுசீரமைப்பதில் எந்த தரப்பு முன்னிலை வகிக்க வேண்டும் என்பது குறித்து பலதரப்பு வங்கிகளுடன் சர்ச்சையில் சிக்கியுள்ளது.

பெய்ஜிங்கில் இருந்து கடன் மறுசீரமைப்பு ஆதரவுக்கான முறையான உத்தரவாதம் இல்லாமல், இலங்கை பிணை எடுப்பிற்கு அனுமதி வழங்க சர்வதேச நாணய நிதியம் (IMF) பரிசீலித்து வருகிறது என்று Bloomberg News கடந்த மாதம் செய்தி வெளியிட்டிருந்தது.

திவாலான நாட்டின் இருதரப்பு கடனில் சுமார் 52% பங்கு வகிக்கும் சீன அரசாங்கம், அரசுக்கு சொந்தமான கொள்கை கடன் வழங்கும் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி மூலம் கால நீட்டிப்புகளை வழங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கிழங்கு, வெங்காயம் விலையில் சரிவு



இதேவேளை, இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கின் விலையும் குறைந்துள்ளதாக தெரியவருகிறது.

கடந்த வாரம் ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கு சுமார் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.



# பருமனானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

“2015 ஆம் ஆண்டில், ஆண்களில் 22.5% பேர் அதிக எடை மற்றும் பருமனானவர்களாக இருந்தனர். 2021 கணக்கெடுப்பின்படி, இந்த எண்ணிக்கை 30% ஆக அதிகரித்துள்ளது.

அதே நேரத்தில், 2015 இல், 34% பெண்கள் அதிக எடை மற்றும் பருமனான பிரிவில் இருந்தனர்.2021 கணக்கெடுப்பின்படி, இந்த எண்ணிக்கை 48% ஆக அதிகரித்துள்ளது

அதிகமாக உட்கொண்டால் அதிகப்படியான அளவு எண்ணெயாக நம் உடலில் தேங்குகிறது.எடை அதிகரிப்பை பாதிக்கிறது.இது பிற்காலத்தில் தொற்றா நோய்கள் ஏற்படும் அபாயத்தை உருவாக்குகிறது என்றார்.

# ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளது



இதன்படி, அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வலுவடைந்துள்ளது.

நாட்டின் பொருளாதார நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் அண்மைய நாட்களாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி கணிசமாக அதிகரித்து வருகின்றது.

சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் மேற்கொண்டுள்ள முன்னேற்றம் மற்றும் தொழிலாளர்களின் பணப்பரிமாற்றத்தின் அதிகரிப்பு காரணமாக முதலீட்டாளர்கள் மத்தியில் நம்பிக்கை அதிகரிப்பதன் மூலம் இலங்கை ரூபாயின் மதிப்பு உயர்வடைகிறது என தரகர்கள் மற்றும் நிபுணர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

# மருமகன் தாக்கி மாமியார் பலி மனைவியின் நிலை கவலைக்கிடம்



இரண்டு பிள்ளைகளின் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நேற்றுக்காலை கடும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது. அது முற்றியநிலையில் வீட்டில் இருந்த கோடரி மற்றும் கத்தியை கொண்டு கணவன் மனைவிமீது தாக்குதலை நடத்தியுள்ளார்.

இதனைதடுக்க சென்ற மனைவியின் தாயார் மீதும் கடுமையான தாக்குதலை மேற்கொண்டுள்ளார். இதனால் தலையில் பலத்த காயமடைந்த மனைவியின் தாயார் சம்பவ இடத்திலேயே பலியானார். படுகாயமடைந்த மனைவி கவலைக்கிடமான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் பெரிய உலுக்குளம் பகுதியை சேர்ந்த டிபி அமராவதி (வயது 60), என்ற பெண் பலியானார், அவரது மகளான துலிகா ரத்தினசிறி (வயது 37) படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலை முன்னெடுத்த நபரை பொதுமக்கள் மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். ஸ்தலத்துக்கு விரைந்த உலுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சிறுமி துஷ்பிரயோகம் ஆசிரியர் கைது

சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே சந்தேகத்தின் பேரில் ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளானதாக கூறப்படும் அந்த சிறுமியிடம் வாக்குமூலம் பெறப்பட்டதன் பின்னர், வைத்திய பரிசோதனைக்காக வைத்தியசாலையில் அச்சிறுமி அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# திகதியை தீர்மானிக்க கூடுகிறது ஆணைக்குழு

Zoom தொழில் நுட்பத்தின் ஊடாக நடைபெற்ற இந்த கலந்துரையாடலில், உரிய வகையில் நிதி கிடைக்காமையினால் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் ஏற்பட்டுள்ள தடைகள் தொடர்பில் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் ஆணைக்குழுவிடம் எடுத்துரைத்துள்ளனர்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடவடிக்கைகள் காலம் தாழ்த்தப்படுகின்றமையால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மாவட்ட தெரிவித்தாட்சி அதிகாரிகளால் இதன்போது ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

# குருந்தூர்மலை விவகார வழக்கு விளக்கமளிப்பதற்காக ஒத்திவைப்பு

விஜயரத்தினம் சரவணன்மு

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலை விவகாரத்தில் நீதிமன்றக்கட்டளை மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மற்றும், தொல்லியல் திணைக்களம் ஆகிய தரப்பினர் எதிர்வரும் 30அன்று நீதிமன்றில் ஆஜராகி தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரணராஜா உத்தரவிட்டுள்ளார்.



நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்த விஹாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயதினர் சார்பில் நேற்று (02) நீதிமன்றில் மன்றில் முறையீடு செய்யப்பட்டது.


ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினர் சார்பில், வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூகஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் நகர்த்தல் பத்திரம் தாக்கல்செய்து, நீதிமன்றக் கட்டளையை மீறி தொடர்ந்தும் சட்டவிரோமாக பௌத்த விஹாரை கட்டுமானப்பணிகள் மேற்கொள்ளப்படுவதாக முறையீடு செய்யப்பட்டது. இதன்போதே நீதிபதியால் மேற்கண்டவாறு உத்தரவிடப்பட்டது.

இதுதொடர்பில் மேலும் தெரியவருகையில், குருந்தூர்மலை தொடர்பாக வழக்கில், 12.06.2022இற்கு முன்னிருந்த நிலையை பேணுமாறும், அதற்குமேல் கட்டுமானப் பணிகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாதென முல்லைத்தீவு நீதிமன்றம் 19.07.2022அன்று கட்டளை பிறப்பித்திருந்தது.

எனினும், நீதிமன்றம் வழங்கிய கட்டளையையும் மீறி குருந்தூர்மலையில் பௌத்த விஹாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

குறிப்பாக கடந்த 23.02.2023 அன்று குருந்தூர் மலைக்கு, தண்ணிமுறிப்புப் பகுதியைச் சேர்ந்த தமிழ் மக்களும், தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சிலரும் கள விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த விஜயத்தின்போதே இவ்வாறு நீதிமன்றத்தின் கட்டளைகள் மீறப்பட்டு



தொடர்ந்தும் பௌத்த விஹாரை அமைக்கப்படுவது உறுதிசெய்யப்பட்டது.

களவிஜயத்தில் ஈடுபட்டவர்களுள் ஒருவரான முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கடந்த 23.02.2023அன்றையதினமே முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை அதனைத் தொடர்ந்து நேற்று (02) முல்லைத்தீவு நீதிமன்றில் AR/673/18 என்னும் வழக்கிலக்கத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றிலும் நீதமன்றக் கட்டளை மீறப்பட்டு கட்டுமானப்பணிகள் இடம்பெறுகின்றமை தொடர்பில் புகைப்பட ஆதாரங்கள் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்தே இம்மாதம் 30ஆம் திகதி மன்றில் தோன்றி விளக்கமளிக்கவேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரணராஜா உத்தரவிட்டுள்ளார்.

## விற்பனைக்கு

வீடு விற்பனைக்கு

ஹோமாகமவில் தேசிய வீடமைப்பு மவுண்ட் கிளிஃபோர்ட்டில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தொகுதியில் தரைத்தளம் உடனடியாக விற்பனைக்கு உண்டு. ஹோமாகம நகரத்துக்கு 1 கிலோ மீற்றர். மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் N.S.B.M உயர்கல்வி நிலையத்துக்கு அண்மையில் உள்ளது. தொடர்புகளுக்கு 0777443497, 0715651789

# வரி ஏய்ப்பில் ஈடுபடின் சிக்கல்

சில தொழில்துறைகளில் ஈடுபட்டு வருபவர்கள் தங்களது வருமானத்தை மறைத்து தொடர்ச்சியாக வரி செலுத்துவதிலிருந்து தப்பித்து வருவதாக நிதி ராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.



கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய திருவிழா இன்று

# அந்தோனியார் அருள் வேண்டி ஆழ்கடல் பயணம்



நடராஜான் ஹரன்

மனிதர்கள் நிரந்தரமாக வசிக்காத இந்தக் கச்சதீவு வருடத்துக்கு ஒருமுறை மட்டும் களைகட்டும்; அந்த மகோன்னத தினம் இன்றாகும்.

வரலாற்று சிறப்புமிக்க கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழா, இன்றும் (03) நாளையும் (04) நடைபெறவிருக்கிறது.

மார்ச் மூன்றாம் திகதி மாலை, கச்சத்தீவில் கொடியேற்றத்துடன் திருவிழா ஆரம்பமாகும். தொடர்ந்து, சிலுவைப்பாதை, வெஸ்பர் ஆராதனைகள் ஒப்புக்கொடுக்கப்படும். மறுநாள், சனிக்கிழமை காலை கூட்டுத் திருப்பலி, சிறப்பு பிரார்த்தனையுடன் விழா நிறைவுபெறும்.

கச்சதீவில் இம்முறை, இலங்கை, இந்தியா ஆகிய இரண்டு நாடுகளில் இருந்தும் அதிகளவான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு ஏற்ற வகையில், விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் இருந்து குறிகட்டுவன் வரையான பஸ் சேவை அதிகாலை நான்கு மணியிலிருந்து நண்பகல் ஒரு மணிவரை நடைபெறும். அதேபோன்று, குறிகட்டுவனில் இருந்து கச்சதீவுக்கு காலை ஐந்து மணி முதல் படகு சேவை ஆரம்பித்து, பிற்பகல் இரண்டு மணி வரை நடைபெறும்.

இதேவேளை, கச்சத்தீவு புனித அந்தோனியார் திருவிழாவில் கலந்து கொள்ள, தமிழ்நாடு, இராமேஸ்வரத்தில் இருந்தும் மக்கள் புறப்பட்டு வருவார்கள். இவர்களுடன் தமிழ்நாட்டில் உள்ள தொலைக்காட்சி, பத்திரிகை செய்தியாளர்களும் அங்கு வரவுள்ளனர்.

கச்சதீவில் அந்தோனியார் திருவிழா என்பதற்கு அப்பால், இருநாட்டு மக்களும் சந்தித்து பொருட்களை பண்டமாற்று செய்யும் இடமாகவே நீண்டகாலமாக இருந்து வந்தது.

இலங்கையிலிருந்து செல்பவர்கள் தேங்காய் எண்ணெய், சவர்க்காரம் ஆகியவற்றை எடுத்து சென்று தமிழக மக்களிடம் கொடுத்து, பட்டுப்புடவைகள் உட்பட இந்திய உற்பத்தி பொருட்களை பண்டமாற்று செய்து கொள்வது வழக்கமாகும்.

இரு நாட்டு மக்களும் சங்கமிக்கும் அமைதி தீவாக விளங்கிய கச்சதீவு, 1975ஆம் ஆண்டு ஒப்பந்தத்துக்குப் பின்னர் இலங்கைக்கு சொந்தமானது. அப்போது பிரதம மந்திரியாக இருந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, இந்திய பிரதம மந்திரி இந்திரா காந்தியுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, கச்சதீவில் தமிழக மீனவர்கள் தங்கி மீன்பிடித்து திரும்பவும், கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய விழாவில் எப்போதும் போல் கலந்து கொள்ளவும் அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

ஒப்பந்தத்துக்கு முன்னர் அந்தோனியார் தேவாலய நிர்வாகம் தமிழ்நாடு, தங்கச்சிமடம் பங்குத் தந்தையின் கீழ் இருந்த போதிலும் ஒப்பந்தத்தின் பின்னர், நெடுந்தீவு பங்குத் தந்தையே அதன் நிர்வாகத்தை கவனித்து வருகின்றார்.

1983இல் கறுப்பு ஜூலையைத் தொடர்ந்து, கச்சதீவு திருவிழாவை இலங்கை அரசாங்கம் நிறுத்தியது. அதன்பின்னர், 2002ஆம் ஆண்டு போர் நிறுத்தத்தை



அடுத்து, உற்சவத்தை நடத்த அனுமதி வழங்கிய இலங்கை அரசு, அங்கு தங்கியிருப்பதற்கு அனுமதி வழங்கவில்லை. தமிழகத்திலிருந்தும் வருபவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை.

## கச்சதீவு வரலாறு

கச்சத்தீவின் பரப்பளவு 285 ஏக்கர் ஆகும். கச்சத்தீவு, இராமேஸ்வரத்திலிருந்து 12 கடல் மைல் அளவுக்கும் குறைவான தூரத்தில் அமைந்துள்ளது.



முந்தைய காலத்தில், இராமநாதபுரம் அரசின் கட்டுப்பாட்டில் இருந்த எட்டு தீவுகளில் கச்சத்தீவும் ஒன்றாகும். இதை, விக்டோரியா மகாராணி தனது பிரகடனத்தில் கூறியிருக்கிறார்.

கி.பி 1605ஆம் ஆண்டில் மதுரை நாயக்க பரம்பரையைச் சேர்ந்த சேதுபதி குறுநில மன்னனின் கீழ் இருந்த தீவுக்கூட்டங்களில் கச்சதீவும் ஒன்றாகும் என்று, 1622-1635 காலத்தைச் சேர்ந்த செப்பேடு ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது.

இதன் பின்னர், ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் சேதுபதி அரச வாரிசு கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின்னர், இத்தீவுகளும் ஆங்கிலேயர்களின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

அதன் பின்னர், தமிழகத்திலிருந்து மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள், அந்தோனியார் தேவாலயத்தைக் கட்டியதாக வரலாற்று குறிப்புகள் தெரிவிக்கின்றன.

**யாழ்ப்பாண பஸ் நிலையத்தில் இருந்து குறிகட்டுவன் வரையான பஸ் சேவை அதிகாலை நான்கு மணியிலிருந்து நண்பகல் ஒரு மணிவரை நடைபெறும். அதேபோன்று, குறிகட்டுவனில் இருந்து கச்சதீவுக்கு காலை ஐந்து மணி முதல் படகு சேவை ஆரம்பித்து, பிற்பகல் இரண்டு மணி வரை நடைபெறும்**

எனினும், கச்சதீவு இந்தியாவை விட இலங்கைக்கு அண்மையில் இருப்பதால், அதன் நிர்வாகம் தம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளை ஏற்று, 1975ஆம் ஆண்டில் இருநாட்டு அரசுகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது.

தற்போது, புனித அந்தோனியார் தேவாலயம் இருந்த இடத்திலேயே புனித தோமையார் தேவாலயம் இருந்ததாகவும், பின்னர் இந்தத் தேவாலயத்தின் அயலில், விறகுவெட்டியால் கண்டெடுக்கப்பட்ட புனித அந்தோனியார் சொரூபம், கொட்டில் கோவிலாக இருந்த புனித தோமையார் தேவாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகவும் அதன் பின்னர் புனிதரின் அற்புதங்கள் பெருகவே, காலக்கதியில், பதுவைப் பதியராம் புனித அந்தோனியார் தேவாலயமாக இடம்பிடித்ததாகவும் வண.பிதா ஞானப்பிரகாசம் அடிகளார் 1932ஆம் ஆண்டு எழுதிய வரலாற்று நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கொட்டில் கோவிலாக இருந்த இந்தத் தேவாலயம் எப்போது கற்கோவிலாகக் கட்டி முடிக்கப்பட்டது என்பது சரிவரத் தெரியாதாயினும், பழைய முகப்புச் சுவரில் 1820 என்ற குறிப்பு இருந்தமையால் அவ்வாண்டிலேயே இத்தேவாலயம் கட்டி முடிக்கப்பட்டது எனக் கருத இடமுண்டு.

2006ஆம் ஆண்டு பழைய ஓடுகளால் அமைந்த கூரைக்குப் பதிலாக அஸ்பெஸ்டஸ் கூரைத்தகடுகளைப் போட்டு தேவாலயம் முற்றிலும் புனரமைப்புச் செய்யப்பட்டது. தற்போது கிரனைட் கல்லினால் செய்யப்பட்ட பலி பீடம் ஒன்றும் புதிதாக செய்யப்பட்டு தேவாலயத்தில் அபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.



# விழித்துக்கொள்! பிழைத்துக்கொள்!



உமாகாந்தன் கஜேந்தினி

( நான்காம் வருடம், ஊடகக் கற்கைகள் துறை, யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)




உலக வனவிலங்கு தினமான மார்ச் 3 அதாவது இன்று, உலகெங்கிலும் உள்ள மக்கள் இயற்கை உலகைக் கொண்டாடவும், வனவிலங்குகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இத்தினம் அனுசரிக்கப்பட்டுள்ளது.

தினங்கள் அனுசரிக்கப்பட்டு கொண்டாடப்படுவது என்பது கவலைக்குரிய பிரச்சினைகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கும், உலகளாவிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும், வளங்களை திரட்டுவதற்கும், மனிதகுலத்தின் சாதனைகளை கொண்டாடுவதற்கும், வலுப்படுத்துவதற்கும் சந்தர்ப்பங்களை வழங்குவதாகும்.


20 டிசெம்பர் 2013 அன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 68ஆவது அமர்வில், உலகின் காட்டு விலங்குகள் மற்றும் தாவரங்கள் பற்றிய விழிப்புணர்வைக் கொண்டாடுவதற்கும், விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கும் மார்ச் 3 ஆம் திகதியை உலக வனவிலங்கு தினமாக அறிவிக்க முடிவு செய்தது.

உலக வனவிலங்கு தினமானது (World Wide Day) காட்டு விலங்கினங்கள் மற்றும் தாவரங்களின் மாறுபட்ட வடிவங்களை, அவற்றின் பாதுகாப்பு மற்றும் அவை மக்களுக்கு வழங்கும் பல நன்மைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. அதே நேரத்தில், பரந்த அளவிலான பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்கங்களைக் கொண்ட வனவிலங்கு குற்றங்கள் மற்றும் மனிதனால் தூண்டப்பட்ட உயிரினங்களின் குறைப்பு ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்தை துரிதப்படுத்த வேண்டிய அவசரத் தேவையை இந்த நாள் நமக்கு நினைவூட்டுகிறது.

உலக வனவிலங்கு தினம் என்பது நமது உலகத்திற்கான நமது பொறுப்புகள் மற்றும் அதை நாம் பகிர்ந்து கொள்ளும் வாழ்க்கை முறைகளை நினைவூட்டும் ஒரு நாள். உலகம் அற்புதமான உயிரினங்களால் நிறைந்துள்ளது. காற்றில் பறவைகள் முதல் கடலில் கம்பீரமான திமிங்கலங்கள் வரை, வனவிலங்குகள் மிகவும் அசாதாரணமான மற்றும் எதிர்பாராத இடங்களில் நிறைந்துள்ளன.

வனவிலங்குகள் பல வழிகளில் நமக்கு நன்மை பயக்கும் நிலையிலேயே செயற்பட்டு வருகின்றன. விலங்குகளை நேசிப்பவராக இருந்தாலும், தாவரங்கள் மீது ஆர்வமுள்ளவராக இருந்தாலும் அல்லது காலநிலை மாற்றத்தைப் பற்றி அக்கறை கொண்டவராக இருந்தாலும், மற்றவர்களுக்கு சுற்றுச்சூழல் தொடர்பாக கல்வி கற்பிக்க ஆர்வமுடையவராக இருந்தாலும் இவர்கள் அனைவரும் பயன்படுத்தக்கூடிய நாள் இந்நாள் ஆகும்.





சீரழிந்த சுற்றுச்சூழல் அமைப்புகளை மீட்டெடுப்பதும் ஊடுருவும் அன்னிய இனங்களின் அறிமுகத்தை தெரிவிப்பதும் மனித இனத்தின் கடமையாகும். காரணம் இயற்கையுடன் இணைந்து மனிதன் வாழ்கின்றான். சுரங்கம், விவசாயம், கட்டுமானம் போன்ற பல மனித நடவடிக்கைகள் தொடர்ந்து வனவிலங்குகளை ஆபத்தில் ஆழ்த்துகின்றன.

பல மரங்களை வெட்டி, நிலத்தை சுத்தப்படுத்தி, பல சாலைகளை அமைத்து, கோடிக்கணக்கான உயிரினங்களின் இயற்கை வாழ்விடங்களை அழித்து, உலகின் பல்லுயிர் பெருக்கத்தை ஆபத்தில் மனிதன் சிக்க வைத்துள்ளான். நிலையான வாழ்க்கையை வாழவும், இயற்கையை மதிக்கவும் அதன் பன்முகத்தன்மையைப் பாதுகாக்கவும் கற்றுக்கொள்ள வேண்டியதும் கற்பிக்க வேண்டியதும் மனிதனின் பொறுப்பாகும்.

அழிந்துபோகும் அபாயத்தில் உள்ள அனைத்து உயிரினங்களின் இயற்கை வாழ்விடங்களைப் பாதுகாக்க, நமது அரசாங்கங்களை வலியுறுத்த வேண்டும். நமது பூமியையும் நம்மையும் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். உள்ளூர் பகுதியில் உள்ள வனவிலங்குகளைப் பற்றி மேலும் அறிந்து செயற்பட வேண்டும். உள்ளூர் அல்லது சர்வதேச அளவில் வனவிலங்குகளைப் பாதுகாக்கும் நிறுவனங்களுக்கு பலவழிகளிலும் உதவ முடியும். அவற்றிற்கு பண உதவி வழங்கலாம்.





மனுக்களில் கையெழுத்திட்டு வனவிலங்கு பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கத்திற்கு எழுதலாம். திரைப்படங்கள், புகைப்படங்கள், கட்டுரைகளை நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் பகிர்ந்து கொள்ளலாம். சமூக ஊடகங்களில் வனவிலங்கு தொடர்பாக இடுகையிட்டு முடிந்த இடங்களில் செய்தியைப் பரப்பலாம். இயற்கையுடனான அதிக அக்கறை, சிந்தனை மற்றும் நிலையான உறவை மனிதர்களாகிய நாம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

செழித்து வரும் பல்லுயிர் பெருக்கத்தில், ஆரோக்கியமான கிரகத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் கண்ணியம் மற்றும் வாய்ப்புகள் கொண்ட உலகின் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய தேவையான அடித்தளத்தை இந்த நாள் வழங்குகிறது. அத்துடன், வனவிலங்குகள் எவ்வளவு அவசியமானவை என்பது பற்றிய உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் பங்களித்து நிற்கிறது.

வனவிலங்குகள் மற்றும் பல்லுயிர் பன்முகத்தன்மை அனைத்து சமூகங்களின் நல்வாழ்வு, பாதுகாப்பு மற்றும் மீள்தன்மைக்கு அடிகோலுகிறது. உணவு, தண்ணீர், வனவிலங்குகள் மற்றும் இயற்கையை சார்ந்துள்ள பில்லியன் கணக்கான குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் நமது பொருளாதாரத்தைப் போலவே அவர்களின் வாழ்வாதாரமும் ஆபத்தில் உள்ளன. நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய வேண்டுமானால், இப்போதே இந்தப் போக்கை மாற்றி இயற்கையை வளர்ச்சியின் மையத்தில் வைக்க வேண்டும்.



உலக வனவிலங்கு தினத்தின் மூலம் நாம் விழிப்புணர்வை ஏற்படுத்த முயல வேண்டும். இயற்கையில் முதலீடு செய்வதன் முக்கியத்துவம் மற்றும் பொது, தனியார் துறை மற்றும் சிவில் சமூக பங்காளிகளின் கூட்டு மூலம் வளங்களின் நீடித்த சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் சவாலை நாம் ஏற்க வேண்டும்,

அதே நேரத்தில் அவற்றைச் சார்ந்திருக்கும் சமூகங்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும். வனவிலங்குகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட மிக முக்கியமான உலகளாவிய வருடாந்த நிகழ்வாக மாறியுள்ள இந்த நாளில் ஊடகங்களும் உறுதியான நடவடிக்கை எடுத்து மனிதனையும் சுற்றுச்சூழலையும் பாதுகாப்போம்!

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களை விட

# தமிழர்கள் அதிகம் வறுமையில் வாழ்கின்றனர்

## தலைமை கூட்டுறவு உத்தியோகத்தர் பரீட் சுட்டிக்காட்டு

■ க. விஜயரெத்தினம்




அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களை விட, தமிழ் மக்கள் அதிகம் வறுமையில் வாழ்கின்றனர் என்று இம்மாவட்டத்தின் தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரும், பொருளியல் நிபுணருமான ஐ. ஐ. எம் பரீட் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசத்தின் அங்கத்துவ சங்கங்களை சேர்ந்த 150 வீட்டு தோட்ட முயற்சியாளர்கள் இவ்வேலை திட்டத்தின் பயனாளிகள் ஆவர். இவர்களில் ஒரு தொகையினருக்கு இரண்டாம் கட்ட ஊக்குவிப்பாக தலா 5,000 ரூபாய் பெறுமதியான விதை பருப்பு பொதிகள் நேற்று (01) சமாசத்தின் கல்முனை தலைமையகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

சமாச தலைவர் எஸ். லோகநாதன் தலைமையிலான வைபவத்தில் சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். இராமகிருஷ்ணன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோது பரீட் மேலும் தெரிவித்ததாவது:

கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது போன்ற பிரதேசங்களில் வாழ்கின்ற முஸ்லிம்களோடு ஒப்பிடுகின்றபோது, தமிழ் மக்கள் வறுமையில் உள்ளார்கள். இவர்களின் வாழ்வாதாரம், வருமானம், வாழ்க்கை தரம், பொருளாதாரம் ஆகியவற்றை உயர்த்துவதற்கு அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசம் அர்ப்பணிப்புடன் பாடுபடுகின்றது. அந்த வகையில்தான் புலம்பெயர் தமிழ் செயற்பாட்டாளர்களுக்கு சிபாரிசுகள் மேற்கொண்டு உள்ளோம்.

பயனாளிகளின் வாழ்வாதாரம், வருமானம், வாழ்க்கை தரம், பொருளாதாரம் ஆகியவற்றில் முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும். அப்போதுதான் பங்களிப்பாளர்கள் திருப்தியும் மகிழ்ச்சியும் அடைவார்கள் என்றார்.






## நிவாரண உதவி



வயது 55ஐப் பூர்த்தி செய்துள்ள மிகவும் நலிவுற்ற 100 குடும்பங்களுக்கு தலா 20,000 ரூபாய் பெறுமதியான உலருணவுப் பொருட்களும் 15 பேருக்கு சுகாதாரம் சார்ந்த பொருட்கள் அடங்கிய பொதிகளும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்களும் HelpAge நிறுவனத்தால் நேற்று (02) வழங்கிவைக்கப்பட்டன. ஏறாவூர்பற்று பிரதேச செயலாளர் கே. தனபாலசுந்தரத்தின் ஆலோசனையின் பேரில், உதவி பிரதேச செயலாளர் நிருபா பிருந்தனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் HelpAge நிறுவன திட்டப் பிரதானி சமிந்த டி சில்வா, கிழக்கு பிராந்திய இணைப்பாளர் ஜே.எம் தாருக்க தனஞ்சய பண்டார, சமூக சேவை உத்தியோகத்தர் பொ. டிமலேஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

–கே.எல்.ரி யுதாஜித்



## கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளராக எஸ். நேசராஜா நியமனம்

■ கே.எல்.ரி யுதாஜித்

இலங்கை கணக்காளர் சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த எஸ். நேசராஜா நேற்று (02) கிழக்கு மாகாண பிரதி பிரதம செயலாளராக (நிதி) நியமிக்கப்பட்டுளார்.

இலங்கை கணக்காளர் சேவை தரம் 1ஐச் சேர்ந்த எஸ். நேசராஜா, 1992ஆம் ஆண்டு ஒகஸ்ட் 17ஆம்திகதி, முல்லைத்தீவு மாவட்ட செலயகத்தில் கணக்காளராக நியமனம் பெற்றார். 1994ஆம்ஆண்டு செப்டெம்பர் முதல் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப்பற்று பிரதேச செயலகக் கணக்காளராகவும் பின்னர் மட்டக்களப்பு மாவட்ட செயலக கணக்காளராகவும் தொடர்ந்து, 2018ஆம் ஆண்டு ஒகஸ்ட் முதல் கொழும்பு தேசிய மிருகக்காட்சி சாலையின் பிரதம கணக்காளராகவும் நியமனம்பெற்று, 2022ஆம் ஆண்டு, பெப்ரவரியில் கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றம் பெற்று மாகாண கல்வி அமைச்சின் பிரதம கணக்காளராக நியமனம் பெற்றார்.

31 வருட கணக்காளர் சேவை அனுபவம் கொண்ட எஸ். நேசராஜா, களுதாவளை மகாவித்தியாலயத்தின் பழைய மாணவரும் யாழ்ப்பாண பல்கலைக்கழக வியாபாரமாணி பட்டதாரியுமாவார்.

மட்டு – கொழும்பு ரயில் கென்ரீனில்

## பாவனைக்கு உதவாத உணவு; வழக்குத் தாக்கல்



■ ரீ.எல் ஜவ்பர்கான்

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி நேற்று முன்தினம் (01) இரவு 8.15 மணிக்கு புறப்படவிருந்த இரவு கடுகதி ரயிலின் கென்ரீன், சுகாதாரத் துறையினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது, கரப்பான்பூச்சி, எறும்புகள் மேய்ந்த நிலையில் உணவுப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் என். மாதவனின் பணிப்புரையின் பேரில் பொதுச் சுகாதார பரிசோதகர்களான ரி. மிதுன்ராஜ், எம். அமிர்தாப், எஸ். கிசாந்தராஜா ஆகியோர் குறித்த பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது, பயணிகளுக்கு விற்பனைக்காக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த மனித பாவனைக்கு உதவாத பெருமளவு உணவுப் பொருட்கள் மீட்கப்பட்டன. குறித்த ரயில் கென்ரீன் நடத்துநர்மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



வில்லுக்குளம் நீரோடையில்

## தவறி விழுந்த இளைஞன் மரணம்

■ வ. சக்தி

மட்டக்களப்பு, அம்பிளாந்துறை, வில்லுக்குளம் நீரோடையில் வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக மரணமான சம்பவம் செவ்வாய்கிழமை (28) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை, ஆர்.கே.எம் பாடசாலை வீதியைச் சேர்ந்த ரீ. கவிசாந் என்பவரே இவ்விபத்தில் பலியானார். சம்பவ தினத்தன்று, நண்பருடன் மோட்டார் சைக்கிளில் கொக்கட்டிச்சோலை பிரதேசத்துக்குச் சென்று, வேலைகளை முடித்து விட்டு, வில்லுக்குள வீதியூடாக மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருக்கும் போது, நீர் நிரம்பிய குழியில் விழுந்து, காப்பாற்றப்பட்டு மகிழடித்தீவு வைத்தியசாலையில் அமனுமதிக்கப்பட்ட போது, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சுழிபுரம் மேற்கு, சவுக்கடியில்

# இந்திய இழுவைமடி படகுகள் வலைகளை அறுத்து நாசம்

■ நிதர்சன் வினோத்



யாழ்ப்பாணம், சுழிபுரம் மேற்கு, சவுக்கடி கடற்பரப்பில் நேற்று முன்தினம் (01) இரவு கடற்றொழிலுக்கு சென்ற மூன்று மீனவர்களின் வலைகள் நாசமாக்கப்பட்டுள்ளன.

சுமார் 12 இலட்சம் பெறுமதியான வலைகளை இந்திய இழுவை மடி படகுகள் அறுத்து நாசம் செய்துள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் சுழிபுரம், திருவடி நிலை கடற்பரப்பிலும் இவ்வாறானதொரு சம்பவம் பதிவாகியிருந்தமை இந்திய இழுவை மடி படகுகள் அத்துமீறி பிரவேசித்து, வடக்கு மீனவர்களின் சொத்துகளையும் வளங்களையும் நாசமாக்கி வருவதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன.



## வட்டுவாகல் பாலத்தை புனரமைத்து உயிர் இழப்புகளைத் தடுக்கவும்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு ஏ-35 வீதியில் விபத்துகள் ஏற்படும் வகையில் காணப்படும் வட்டுவாகல் பாலத்தைப் புனரமைக்க இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டாத நிலையில், குறித்த பாலம் தொடர்ந்தும் ஆபத்தானதாக காணப்படுவதுடன் அடிக்கடி விபத்துகளும் ஏற்பட்டு வருகின்றன.

எனவே, இப்பாலம் புனரமைக்கப்பட வேண்டுமென்ற என்ற கோரிக்கை, கடந்த 13 வருடங்களாக பலராலும் முன்வைக்கப்பட்டு வருகின்ற நிலையில், குறித்த பாலத்தைப் புனரமைப்பதற்கு ஆயிரம் மில்லியன் ரூபாய் நிதி தேவையென 2016ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அதற்கான அமைச்சரவை அனுமதியும் பெறப்பட்ட போதும் புனரமைப்பு பணிகள் எதுவும் முன்னெடுக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது.

தொடர்சியாக பிரதேச மற்றும் மாவட்ட மட்டங்களில் நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கலந்துரையாடல்களிலும் குறித்த விடயம் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும், அதன் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படாமையால், பாலம் ஆபத்தான நிலையில் தொடர்ந்தும் காணப்படுகிறது.

எனவே, குறித்த பாலத்தில் அடிக்கடி இடம்பெறும் விபத்துகளல் உயிரிழப்புகளைத் தடுப்பதற்கு, இதைப் புனரமைப்பதற்கான நிதியை பெற்று புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு பல்வேறு தரப்பினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பூநகரியில் கௌரவிப்பு



■ நடராசா கிருஸ்ணகுமார்

பூநகரி பிரதேச சபையின் இரணைதீவு உப அலுவலகத்துக்கு உட்பட்ட பொது நூலகத்தின் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆக்கத்திறன் மற்றும் ஏனைய சுயதொழில் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் 'முத்தொளி' சஞ்சிகை வெளியீடும் செவ்வாய்க்கிழமை (28) இரணைதீவு உப அலுவலகத்தில் நடைமபெற்றது.

பிரதேச சபையின் தவிசாளர் சி. சிறிரஞ்சன் மற்றும் பிரதேச சபையின் அதிகாரிகள் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினர். இந்நிகழ்வில் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

நானாட்டானில் நீர் இறைக்கும் இயந்திர

## திருடன் மடக்கிப்பிடிப்பு

■ எஸ். றொசேரியன் லெம்பேட்



மன்னார், நானாட்டான் பிரதேசத்தில் பல வீடுகளில் தொடர்ச்சியாக பெறுமதி மிக்க நீர் இறைக்கும் இயந்திரங்களைத் திருடி வந்த நபரை பொலிஸாரின் உதவியுடன் நேற்று முன்தினம் (01) பொதுமக்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் தொடர்ச்சியாக நீர் இறைக்கும் இயந்திரங்கள் களவாடப்பட்டு வந்துள்ளன. இந்த நிலையில், சந்தேகத்தில் அருவி ஆற்றங்கரையில் உள்ள தோட்ட வீட்டு வளவை சோதனை செய்த போது, திருடப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன.

இவ்விடயம் தொடர்பாக, முருங்கன் பொலிஸ் நிலையத்துக்கு தெரிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்கு வருகை தந்த முருங்கன் பொலிஸார் , சந்தேக நபரை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட நபர் இராசமடு, அருவி ஆற்றங்கரையில் வசிக்கும் 39 வயது மதிக்கத்தக்க நபர் எனவும் குறித்த நபரிடம் இருந்து மூன்று நீர் இறைக்கும் இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டு உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்திய மீனவர்களின் படகுகளுக்கான உரிமை கோரும் வழக்கு

## நான்கு படகுகளை விடுவிப்பு; நான்கு படகுகள் அரசுடமை

■ நிதர்சன் வினோத்

எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் படகுகளுக்கான உரிமை கோரும் வழக்கு, நேற்று முன்தினம் (01) ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நீதிபதி ஜே. கஜநிதிபாலன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, ஜனவரி மாதம் எட்டு படகுகளுக்கான உரிமை கோரும் வழக்கில் நான்கு படகுகளின் உரிமையாளர்கள் மன்றில் முன்னிலையாகி சாட்சியம் அளித்திருந்தனர்.

இதன்போது, ஓர் உரிமையாளர் வழக்குக்கு முன்னிலை ஆகியிருக்கவில்லை. அத்துடன் மூன்று படகுகளில் உரிமையாளர்கள், தமக்குப் பதிலாக வேறு நபர்களை அனுப்பி இருந்ததன் காரணமாக,டு நீதிமன்றம் குறித்த மூன்று படங்களுக்கான மூன்றாம் நபரின் சாட்சியங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அதன் காரணமாக, ஜனவரி மாதம் இடம்பெற்ற எட்டுப் படகுகளின் வழக்கில் நான்கு படகுகளை விடுவித்து கட்டளை பிறப்பிக்கப் பட்டுள்ளதுடன் நான்கு படகுகள் அரசுடமையாக்கி கட்டளை பிறப்பித்திருந்தது.

மேலும், ஆறு புதிய படகுகளுக்கான வழக்கும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, நான்கு படகுகளுக்கான உரிமையாளர்கள் சமூகமளிக்காமையால் நான்கு படகுகளும் அரசுடைமையாக்கப்பட்டு கட்டளையிடப்பட்டுள்ளது.

இரண்டு படகுகளில் உரிமையாளர்களின் வாக்குமூலங்கள் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டு எதிர்வரும் மே மாதம் எட்டாம் திகதிக்கு கட்டளைக்காக தவணை இடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற வழக்கில் 14 படகுகளுக்கான வழக்குகள் இடம்பெற்றபோது, நான்கு படகுகள் விடுவிக்கப்பட்டு உள்ளதுடன் நான்கு படகுகள் அரசுடைமையாக்கப்பட்ட கட்டளையிடப்பட்டுள்ளது. அத்துடன் இரண்டு படங்களுக்கான கட்டளைக்காக எதிர்வரும் மே மாதம் 8ஆம் திகதி தவணை இடப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட நான்கு படகுகளும், இலங்கை கடற்பரப்பில் வைத்து பராமரிக்கப்பட்டு அதற்கான பராமரிப்பு செலவாக 129,500 ரூபாயும், இரண்டாவது படகுக்கு 54,500 ரூபாயும், மூன்றாம் மற்றும் நான்காம் படகுகளுக்கு தலா 1480,000 ரூபாயும் செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும் என மன்று உத்தரவிட்டுள்ளது.

மேலும், வழக்குத் தொடுனர் மற்றும் எதிராளிகள் கட்டளை தொடர்பில் ஆட்சேபனை இருப்பின் மேன்முறையீட்டைச் செய்து கொள்ள முடியும் எனவும் மன்று பரிந்துரைத்தது.

மேன்முறையீட்டுக் காலம் வரை படகுகள் எடுத்துச் செல்ல முடியாது எனவும், மேன்முறையீட்டின் பின்னர் படகினை எடுத்துச் செல்ல முடியும் என்றும் ஊற்காவற்றுறை நீதிமன்ற நீதவான் கட்டளை பிறப்பித்துள்ளார்.

# மண்ணெண்ணெய் விற்பனை எகிறியது

■ ரஞ்சித் ராஜபக்ஷ

மண்ணெண்ணெய் விலை குறைக்கப்பட்டுள்ளதை அடுத்து, ஹட்டனில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் மண்ணெண்ணெய் விற்பனை அதிகரித்துள்ளது என அந்த நிலையங்களின் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.



மண்ணெண்ணெயின் விலை அதிகரிக்கப்பட்டதை அடுத்து பாவனையை தாங்கள் குறைத்துக்கொண்டுள்ளதாக பெருந்தோட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

# விற்கமறுத்த மறுநாளே 2 மாடுகளும் மாயம்

■ சுமணசிறி குணதிலக்க

விற்பனை செய்வதற்கு விலைபேசிபோது விற்பதற்கு மறுத்த மறுநாளே, இரண்டு மாடுகளும் காணாமல் போன சம்பவம் மொனராகல, குடாஓயா பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 28ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் அவ்விரண்டு மாடுகளின் உரிமையாளரான பெண், மார்ச் 1ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளார்.

சுமார் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் பெறுமதியான இரண்டு மாடுகளையும் மேச்சலுக்கு விட்டிருந்த நிலையிலேயே இவ்வாறு களவாடப்பட்டுள்ளது என்றும் அம்முறைப்பாட்டில் தெரிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு மாடுகளையும் கொள்வனவு செய்வதற்கு, சில தினங்களுக்கு முன்னர் அப்பெண்ணுக்கு நபரொருவர் அழைப்பை ஏற்படுத்தி, விலைகளை கேட்டுள்ளார்.

அந்தமாடுகளை தான் விற்க போவதில்லை என பெண் பதிலளித்ததுடன், அன்றையதினமே, சந்தேகத்துக்கு இடமான வாகனமொன்று அங்கு நடமாடியுள்ளது. மறுநாள் அவ்விரு மாடுகளும் காணாமல் போயுள்ளன என்று அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆணின் சடலம் மீட்பு; அடையாளம் காட்டவும்

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவில் மாவில்மடு பிரதேசத்தில் மகாவலி கங்கையில் இருந்து ஆணின் சடலம் நேற்று முன்தினம் (01) மீட்கப்பட்டுள்ளது.




கட்டுகஸ்தோட்டை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவம் தொடர்பாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

45 - 55 வயதுக்கு இடைப்பட்ட நபரின் சடலமே மீட்கப்பட்டுள்ளதுடன், குறித்த நபர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

சடலம் கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டு உள்ளதுடன், மேலதிக விசாரணைகளை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மாணிக்கக்கல் அகழ்ந்த மூன்று பேர் சிக்கினர்

சட்டவிரோதமான முறையில் மஸ்கெலியா, ப்ரௌன்ஸ்வீக் தோட்டத்தில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் நேற்று முன்தினம் (01) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.



மஸ்கெலியா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் மாணிக்கக்கல் அகழ்வுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

29, 32, 65 வயதுடைய மஸ்கெலியா பகுதியை சேர்ந்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 08ஆம் திகதி ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜராகுமாறு அறிவுறுத்தப்பட்டு பொலிஸ் பிணையில் சந்தேக நபர்கள் விடுவிக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

# மஸ்கெலியா வருகிறார் இராஜாங்க அமைச்சர்

■ செ.தி.பெருமாள்

கல்வி இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்த்குமார் சனிக்கிழமை 4 ஆம் திகதி மஸ்கெலியா பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளார்.



அவர், அப்பிரதேச மக்களுடன், கலந்துரையாடல் ஒன்றை மஸ்கெலியா ரோயல் மண்டபத்தில் நடத்த உள்ளார்.

ஹட்டன், ஹைலன்ஸ் கல்லூரி கேட்போர் கூடத்தில் கல்விப் பொது தராதர உயர் தரத்தில் சிறந்த சித்தி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி மலையக மாணவர்களை கற்றல் நடவடிக்கைகளில் ஊக்குவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்விலும் கலந்துகொள்வார்.

ஹட்டன் ஹைலன்ஸ் கல்லூரி அதிபர் தலைமையில் மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு காலையிலும், மஸ்கெலியா ரோயல் மண்டபத்தில் மக்கள் சந்திப்பு மாலை 3 மணிக்கும் நடைபெறும்.

# மது வேண்டாம்; மாது கோரிக்கை

■ ஆ.ரமேஸ்.

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாகுடுகலை தோட்டத்தில் 15 வருடங்களுக்கு பின்னர் தலை தூக்கியுள்ள சட்ட விரோத மது விற்பனையை தடுக்க பொலிஸார் உள்ளிட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாகுடுகலை தோட்ட பெண்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மாகுடுகலை தோட்டத்தில் கடந்த 15 வருடங்களுக்கு முன்னர், இரு குடும்பங்களை சேர்ந்தவர்கள் மது அருந்திவிட்டு மோதலில் ஈடுப்பட்டனர். அதன்போது பெண்ணொருவர் கத்தி வெட்டுக்கு இலக்காகி பலத்த காயங்களுக்கு உள்ளானார்.

இந்தச் சம்பவம், மாகுடுகலை தோட்டத்தை அண்மித்த மாகுடுகலை சிறிய நகர் பகுதியில் அமைந்திருந்த மது விற்பனை நிலையத்தில் மது அருந்தி விட்டு வந்த இரு குடும்பங்களைச் சேர்ந்த ஆண்களால் நடந்தேறியது.

அத்துடன் இவ்வாறு மது அருந்தி வீடு திரும்பும் ஆண்கள், தங்களின் வீடுகளில் தினமும் சண்டையிட்டு தோட்ட மக்களின் நிம்மதிக்கும் பாதிப்பை ஏற்படுத்தி வந்தனர்.

இந்த நிலையில் மாகுடுகலை தோட்டத்தை அண்மித்த சிறிய நகரில் இயங்கி வந்த மது விற்பனை நிலையத்தை மூடிவிட வேண்டும் என இத்தோட்டத்தில் வசித்து வந்த இரு பெண்கள் முன்னெடுத்த முயற்சியால் இதற்கு ஆதரவு வழங்கிய தோட்ட பெண்கள் மற்றும் இளைஞர்கள் இணைந்து போராட்டத்தை மேற்கொண்டு மதுபான விற்பணை நிலையத்தை மூடிவிட்டனர்.

அன்றிலிருந்து 15 வருடங்களாக மாகுடுகலை தோட்டத்தில் மது பாவனை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டு, தோட்ட மக்களின் குடும்பங்கள் நிம்மதியாக வாழ்க்கையை நடத்தி வந்ததாக தோட்டப் பெண்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில், தோட்டத்தில் மூன்று நபர்கள் சட்ட விரோதமாக மது விற்பனையை செய்கின்றனர். இம்மது விற்பனை, லயன் குடியிருப்பு வீடுகளில் செய்யப்படுகிறது.

இதன் காரணமாக வியாபாரிகளின் வீடுகளுக்கு, இரவு வேளையில் மது அருந்த வரும் நபர்கள் அங்கு மது அருந்திய பின்னர் கூச்சல் இடுவது, அநாகரிகமாக நடந்துகொண்டு தகாத வார்த்தைகளை பிரயோகிப்பது, அத்துடன் சண்டைகள் போட்டுக்கொள்வது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர் என்றும் அந்தத் தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அருகில் உள்ள குடியிருப்பாளர்கள், பாடசாலை செல்லும் மாணவர்கள், நோயாளிகள் என பலர் நிம்மதி இழந்து வருவதாகவும், பெண்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக இராகலை மற்றும் ஹய்பொரஸ்ட் பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இருந்த போதிலும் உரிய நடவடிக்கைகளை எடுக்க பொலிஸார் தவறி வருவதால், இத்தோட்டத்தில் சட்டவிரோத மது விற்பனை வலுவடைந்து வருவதாகவும் தோட்ட பெண்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, மாகுடுகலை தோட்டத்தில் குடும்பங்கள் நிம்மதியாக வாழவும், சமூக சீர்கேடுகளில் இருந்து இத் தோட்ட மக்களை பாதுகாக்கவும், மாணவர்கள் நிம்மதியாக கல்வி கற்கவும் வழிசமைக்க வேண்டுமென தோட்ட பெண்கள் கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

அதற்கு தோட்டத்தில் தலைதூக்கியுள்ள மது விற்பனையை தடை செய்ய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காலம் தாழ்த்தாது நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் மாகுடுகலை தோட்டப் பெண்கள் கோரிக்கை விடுப்பதாகவும் மேலும் தெரிவித்தனர்.




## ஒத்திவைத்தமைக்கு நடவடிக்கை எடு

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி, ஐக்கிய மக்கள் சக்தியினர், யட்டியந்தோட்டையில் நேற்று (02) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

என். ஆராச்சி

# காட்டுத் தீயால் நீரூற்று வரண்டு விடும்



■ சுதத் எச்.எம்.ஹேவா

ஹட்டன் உள்ளிட்ட பிரதேசங்களில் இருக்கும் பற்றைக்காடுகளைத் தீயிட்டு கொளுத்துவதன் ஊடாக, நீரூற்றுகள் வரண்டு, தண்ணீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

இந்தப் பிரதேசத்தில் நிலவும் வரட்சியான வானிலை காரணமாக, குடிநீரைக்கூட முறையாக விநியோகிக்க முடியாத நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என நீர்வழங்கல் சபையின் ஹட்டன் காரியாலய அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஹட்டன் நகருக்கு தண்ணீர் விநியோகிக்கும் சிங்கமலை நீர்த்தொட்டியின் நீர்மட்டம் கடுமையாக குறைந்துள்ளது என்றும் இதனால் தண்ணீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், நுகர்வோருக்கு வாரத்துக்கு இரண்டு நாள்கள் மட்டுமே நீரை விநியோகிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் அவ்வதிகாரி தெரிவித்தார்.

# நொரகல்ல த.வியில் 3 மாணவர்கள் சித்தி

■ உமாமகேஸ்வரி

நிவித்திக்கலை கல்வி வலயத்துக்கு உட்பட்ட நொரகல்ல தமிழ் வித்தியாலயத்தில் கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் முதற்தடவையாக மூன்று மாணவர்கள் சித்தியடைந்து சாதனைப்படைத்துள்ளனர் என அப்பாடசாலையின் அதிபர் பெருமாள் பரமசிவன் கூறினார்.

“மிகவும் பின்தங்கிய பிரதேசத்தில் உள்ள இப்பாடசாலையில் போதிய வளங்களும் தேவையான ஆசிரியர்களும் இல்லாத சூழ்நிலையில் 3 மாணவர்கள் சித்தியடைந்தது வரலாற்று சாதனையாகும்” என்றார்.




இப்பரீட்சையில் விஸ்வநாதன் டினுசன் என்ற மாணவன் 175 புள்ளிகள் பெற்று மாகாண மட்டத்தில் (தமிழ்மொழியில்) இரண்டாம் இடத்தையும் வலய மட்டத்தில் முதலாமிடத்தையும் பெற்று சாதனைப்படைத்துள்ளார்.

விஸ்ணுகுமார் அக்ஸயா என்ற மாணவி 147 புள்ளிகளையும் நவரத்தினகுமார் மோக்ஸிதா என்ற மாணவி 144 புள்ளிகளையும் பெற்று சித்தியடைந்துள்ளனர். என்றார்.

சித்தியடைந்த மாணவர்களையும் வகுப்பாசிரியை பி.ஹரணியையும் அதிபர் பெருமாள் பரமசிவன் ஆகியோரையும் படத்தில் காணலாம்

# சத்துணவு திட்டத்தை வரவேற்ற சஞ்சய்; ஜீவனிடம் வினயமாக கேட்டுக்கொண்டார்

■ நீலமேகம் பிரசாந்த்

உலக வங்கியின் ஊடாக மலையக பெருந்தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் உள்ள சிறார்களுக்கு போஷாக்கான சத்துணவு வழங்கப்படுவது வரவேற்கத்தக்கது. ஆனால் அதை படம் பிடித்து விளம்பரம் தேடிக்கொள்வதும் மலையக சிறார்களை போஷாக்கற்றவர்கள் போல சித்திரிப்பதும் எம் சமூகத்தை நாமே இழிவுபடுத்துவது போல காணப்படுவதாக மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விளக்கமளிக்கையில், உலக வங்கியின் நிதியொதுக்கீட்டின் கீழ் மலையகத்தில் காணப்படும் சிறுவர் பராமரிப்பு நிலையங்களைச் சேர்ந்த 23,000 சிறார்களை இலக்கு வைத்து ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், வெறுமனே ஆறுமாதங்களுக்கு மாத்திரமே வழங்கப்படவுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் திட்டம் வரவேற்கத்தக்கது. எனினும், எம் மலையக சிறார்கள் இத்தனை காலமும் போஷாக்கற்றவர்கள் போல சித்திரிப்பதும் உணவுகளை வழங்கும் போது அவர்களின் புகைப்படங்களை ஊடகங்களை பதிவேற்றுவதும் சற்று நம் சமூகத்தை இழிவுபடுத்துவது போல அமைகின்றது என்றார்.

எனவே, இவ்வாறான செயற்பாட்டை அமைச்சர் ஜீவன் தொண்டமான் மாற்றி கொள்ள வேண்டும். அதேபோல



தன் ஆதரவாளர்களுக்கும் தன் கட்சியை சார்ந்தவர்களுக்கும் கூற வேண்டும் என்றும் சஞ்சய் கேட்டுக்கொண்டுள்ளார்.

# சர்க்கரை நோய் பரிசோதனையும் தரமில்லாத கீற்றுகளும்

ஒவ்வொரு வருடமும் மார்ச் 4ஆம் திகதி 'உலக உடல் பருமன் தினம்' அனுஷ்டிக்கப்படுகின்றது. அன்றையதினம் உடல் பருமனாக இருப்பவர்களுக்கு மட்டுமன்றி, சாதாரண உடல் எடையுடன் இருப்பவர்களுக்கு விழிப்புணர்வு செற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதிக எடை மற்றும் பருமனானவர்களின் எண்ணிக்கை அதிகரிப்புக்கு, உணவு பழக்க வழக்கங்கள் மற்றும் உடலுக்குத் தேவையான உடற்பயிற்சிகளை செய்யாமை, போஷாக்கான உணவுகளுடன் எண்ணெய் படியக்கூடிய உணவுகளை உட்கொள்ளுதல், வியர்வை சிந்தாமல், சோம்பேறியாக உடலை முறுக்குதல் உள்ளிட்டவையை காரணங்களாக கூறுகின்றனர்.

உடல் பருமனும் எடையும் கூடிக்கொண்டு போகாமல் இருக்கவேண்டும். இல்லையேல் அதுவே பிற்காலங்களில் பெரும் பிரச்சினைகளை தோற்றுவித்துவிடும். அவ்வாறானவர்களுக்கு தொற்றா நோய்கள் ஏற்படும் அபாயம் அதிகமாகும்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் மருந்து வகைகளுக்கான தட்டுப்பாடு, விலைகள் ஆகியவற்றை கவனத்தில் எடுத்து யோசித்தால், உடல் பருமன் அதிகரித்துக்கொண்டு செல்லவிடாது ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொள்ளமுடியும்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் 'விழிப்புடன் இருப்போம்; பருமனில் இருந்து விடுபடுவோம்' என்ற தொனிப்பொருளில் இம்முறை விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எமது நாட்டைப் பொறுத்தவரையில், '2015 ஆம் ஆண்டில், ஆண்களில் 22.5% பேர் அதிக எடை மற்றும் பருமனானவர்களாக இருந்தனர். 2021 கணக்கெடுப்பின்படி, இந்த எண்ணிக்கை 30% ஆக அதிகரித்துள்ளது.

அதேநேரத்தில், 2015 இல், 34% பெண்கள் அதிக எடை மற்றும் பருமனான பிரிவில் இருந்தனர். 2021 கணக்கெடுப்பின்படி, இந்த எண்ணிக்கை 48% ஆக அதிகரித்துள்ளது. எஞ்சியிருக்கும் 2022 கணக்கிலெடுத்தால் அந்த சதவீதம் இன்னும் கூடும்.

ஆக, உடலில் கலோரியை எரிப்பதற்காக நாளொன்றுக்கு செய்யவேண்டிய ஆகக்குறைந்த உடற்பயிற்சிகளை கட்டாயமாக செய்வது அவசியமாகும். இல்லையேல், மேலே குறிப்பிட்டதைப் போல தொற்றா நோய்கள் ஏற்படுவதை தவிர்க்கவே முடியாது.

இந்நிலையில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தரமற்ற நீரிழிவு பரிசோதனை, கீற்றுகள் மற்றும் அளவீடுகளை கொள்வனவு செய்வதற்கு மருத்துவ வழங்கல் பிரிவு செயற்பட்டு வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இந்தியாவுக்கு அண்மையில் சென்றிருந்த சமயம், தரமற்ற அல்லது பரிந்துரைக்கப்படாத மருந்துகளை, பதிவு செய்யப்படாத நிறுவனத்தில் இருந்து கொள்வனவு செய்வதற்கு முயன்றார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இந்நிலையிலேயே, சர்க்கரை நோய் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு தரமில்லாத கீற்றுகளை கொள்வனவு செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

நமது நாட்டை பொறுத்தவரையில் ஊழல் மலிந்து கிடக்கின்றது. எங்குபார்த்தாலும் ஊழல், மோசடி. ஆகையால், மனித உயிர்களுடன் விளையாடாமல், தரமான மருந்துகளை கேள்வி கோரலின் ஊடாகக் கொள்வனவு செய்வதற்கு ஆவண செய்யவேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

உலகில் எவருமே தகுதி குறைந்தவர்ககள் என எண்ணக்கூடாது. ஒவ்வொரு மனிதனும் தனக்குத்தானே தலைவன். அவர்களைப் போல் ஒருவருமே உருவாகமுடியாது.

ஒவ்வொருவருமே இறைவனின் மிகநுட்பமான படைப்புகள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குணம்; வடிவம், புத்தி. செயல்கள் என யாவற்றிலுமே வித்தியாசங்கள்.

உண்மைகள் அனைத்தையும் எவருமே முழுமையாகத் தெரிந்துகொள்வது கிடையாது. எல்லா விடயங்களிலும் அதிபுத்திசாலியாக இயங்கமுடியாது.

யாவருக்கும் ஏதோ ஒரு தொழில் உண்டு. நாங்கள் சொல்லும் எளிய கருமங்களை முழுமையாகச் செய்ய முடியாது. ஆனால், தொழில் தெரிந்தவனே இலகுவாகச் செய்கின்றான். எல்லோருமே ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்பவர்களே!

எனவே, நாங்கள் எங்களைப் பற்றி பெருமை பேச இயலாது. உண்மைகளை உணர்ந்தால் அடக்கம் உருவாகும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்



தெ. ஞாலசீர்த்தி
மீநிலங்கோ

வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 17:

# தென்கிழக்காசியாவில் அதிவலதின் இயங்குதளங்கள்

இன்றைய நவீன காலத்தில் அதிவலதின் இயங்குதளங்கள் மாறி வருகின்றன. குறிப்பாக, ஆசிய சூழலில் இவை புதிய சவால்களாக உருவெடுத்துள்ளன.

நவ-நாசிச சிந்தனைகள், வெள்ளை மேலாதிக்க அரசியல் என்பன ஆசிய இளைஞர்களால் கேள்விகளின்றி ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவர்கள் புவியியல் எல்லைகளால் வரம்பற்ற 'ஒன்லைன்' பயனர்களாக உள்ளனர். இதனால் அவர்களால் அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் நடப்பதை இலகுவில் உள்வாங்க முடிகிறது.

ஆனால், இங்கு கவனிப்புக்கு உள்ளாக வேண்டியது யாதெனில், இவ்வாறு மேற்குலக அதிவலது சித்தாந்தத்தால் கவரப்படுகின்ற இவ்விளைஞர்கள் வெள்ளையர்களோ ஆரியர்களோ அல்ல. நவ-நாசிசம், வெள்ளை இனம் அல்லது ஆரிய இனமே இனப்படிநிலையில் ஆதிக்கம் செலுத்துகிறது என்ற வலியுறுத்தலில் தன்னைக் கட்டமைத்தது. ஆனால் வெள்ளையராகவோ ஆரியராகவோ இல்லாத இளைஞர் கூட்டத்தை, இக்கருத்தாக்கம் எவ்வாறு கவர்ந்தது?

இந்த வினா மிகவும் முக்கியமானது. இதை விளங்கிக் கொள்வது இலங்கையின் அதிவலதின் இயங்குதளங்களையும் புரிந்து கொள்ள உதவும். ஏனெனில், இலங்கையிலும் அதிவலதின் செல்வாக்கு கடந்த பத்தாண்டுகளில் அதிகரித்துள்ளது. அவை பெரும்பாலும் மதரீதியாகக் கட்டமைக்கப்பட்டாலும் அதன் இயங்கியல் பெரும்பாலும் ஏனைய ஆசிய நாடுகளின் அதிவலதின் பாணியை ஒத்திருக்கிறது.

ஆரிய வெள்ளை நிறவெறியை மையமாகக் கொண்ட நவ-நாசிசச் சிந்தனைகள், உள்ளூர் சூழலுக்கு ஏற்றவகையில் எளிதில் மாற்றி அமைக்கப்படுகின்றன. ஆரிய மேன்மை என்பது, தேசியவாத மேன்மையாக முன்னெழுகிறது. இனத்தூய்மை என்ற கருத்தாக்கம் அதற்குப் பயன்படுகிறது.

இவ்வாறு மாற்றியமைக்கவும் பரப்பவும் இச்சிந்தனைகள் பாசிசவாத எண்ணம் கொண்டோரை அடையவும் இணையம் மிகப்பெரிய வாய்ப்பாயுள்ளது. இந்த வாய்ப்பு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது; எவ்வாறு இளைஞர்களைக் கவருகிறது என்பதே இந்தக் கட்டுரை பேசவிளைகின்ற புதிர். இந்தப் புதிருக்கு நான்கு முக்கியமான அம்சங்கள் உள்ளன.

முதலாவதாக, கொலனித்துவ காலத்துக்குப் பின்பு வெள்ளை நிறத்துக்கும் அதிகாரத்துக்கும் இடையிலான தொடர்பு பற்றிய புரிதல் இன்னமும் எட்டப்படவில்லை. அது முக்கியமானது. குறிப்பாக கொலனியாதிக்கத்துக்கு உட்பட்ட நாடுகளின் அனுபங்களின் வழி, இது ஆழமாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

உதாரணமாக, இந்தோனேசியாவில் வளர்ந்த முந்தைய பாசிச இயக்கங்கள் கொலனித்துவ எதிர்ப்புப் பிரதிபலிப்பாக வளர்ந்தன. தீவிர தேசியவாதத்தின் வடிவத்தில் அரசை ஆட்சிசெய்வது என்ற நிலைப்பாட்டை எடுத்தன. அது வெள்ளைக் கொலனியவாதிகளுக்கு எதிரான இயக்கமாக இருந்தது. ஆனால், கொலனியாதிக்க விடுதலையின் பின்னர் தோற்றம்பெற்ற அதிவலது வேறுபட்டதாக இருந்தது. அது மேற்கத்தைய அதிவலது சித்தாந்தத்தை அடியொற்றியது. வெள்ளை நிறவெறியைத் தனது உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப இனவாத, மதவாத, பிரதேசவாத வெறியாக உருமாற்றியது. இவை இன்னமும் பரந்த தளத்தில் ஆய்வுக்குட்படவில்லை.

இலங்கை சூழலில் அநகாரிக தர்மபாலவின் பௌத்த மீளெழுச்சியின் அடித்தளம், கொலனியாதிக்க எதிர்ப்பு. அவரது தொடர்ச்சி இன்று, 'சிங்கலே - சிகல - ராவண- பொதுபலசேனா' ஆகியவற்றின் இயங்கியல் தொடர்ச்சியாக உருமாறியுள்ளதை இந்தோனேசியாவுடன் ஒப்பிட்டு நோக்கவியலும்.

அநகாரிக தர்மபால போலவே ஆறுமுகநாவலரின் இயங்கியலும் கொலனியாதிக்க எதிர்ப்பில் மையம்கொண்டது. இலங்கை அனுபவம் தருகின்ற பாடம் யாதெனில், அநகாரிக தர்மபாலவும் ஆறுமுகநாவலரும் கொலனிய அடக்கமுறைக்கு எதிரான எதிர்ப்புக்கு எடுத்துக்கொண்ட கருவிகளும் காலப்போக்கில் அடக்கமுறையின் ஆயதங்களாகின என்பதாகும்.

இரண்டாவதாக, கலாசார அவநம்பிக்கையின் பிரதிபலிப்பாக பேரினவாத தூண்டுதல்கள் எவ்வாறு எழுகின்றன என்பதை சிந்திக்க வேண்டும். 'நவீனத்துவத்தை' நிராகரிப்பதற்கும் தூய்மையானதாகவும் பாரம்பரியமானதாகவும் கருதப்பட்ட இனத்தைக் காத்துக் கொள்ளவும் நாட்டுக்குரிய விசுவாசத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு மூலோபாயமாக அதிவலதை ஏற்றுக்கொள்வதற்கும் இடையில் ஆழ்ந்த தொடர்பு உள்ளது.

உதாரணமாக, 2021இல் நடந்த சதிப்புரட்சியின் வழி பதவிக்கு மீண்ட மியன்மாரின் இராணுவ ஆட்சிக் குழுவை, மியன்மார் தேசபக்திச் சங்கம் (அதிதீவிர பௌத்த பிக்குக்களின் அமைப்பு) அரவணைத்துக்கொண்டது. 2015இல் இராணுவ ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, ஜனநாயக அடிப்படைகள் மெதுமெதுவாக மீண்ட நிலையில், சமத்துவமும், நீதியும் நிலைப்பதற்கான அடிப்படைக் கட்டமைப்புகள் தோற்றம் பெறத் தொடங்கின. இதை அதிதீவிர பிக்குகள் விரும்பவில்லை. அவர்கள் 2015 முதல் நாட்டை மாற்றியமைத்த நவீனமயமாக்கலைத் திரும்பப் பெற விரும்புகிறார்கள்.

இலங்கையில் 'வியத்மக'வின் வழிகாட்டலில் ஆட்சிபீடம் ஏறிய கோட்டாபயவின் கதையும் மியன்மாரிய உதாரணம் போன்றதே. இந்த உதாரணங்கள், தெளிவாக எடுத்துரைப்பது யாதெனில், தென்கிழக்காசிய தீவிர வலதுசாரிகள் மற்றும் தீவிர தேசியவாதிகள் சமத்துவம், பெண்ணியம் போன்ற மதிப்புகள் நிராகரிக்கப்படும். அந்நியர்கள் வெளியேற்றப்படும் ஒரு தேசத்தை கற்பனை செய்கிறார்கள். அந்தத் தேசத்தை உருவாக்குவதற்காக வன்முறையை வரன்முறையின்றிப் பயன்படுத்துவதை ஆதரிக்கிறார்கள்.

அதேனநேரத்தில் பாரம்பரிய ஆண்பால் மதிப்புகள் மேநிலையாக்கம் அடைந்து சமூகத்தில் நிலைநிறுத்தப்படுகின்றன; போற்றப்படுகின்றன. ஆண்மேலாதிக்கத்தை சர்வவியாபகமான ஒரு சூழலை நோக்கி நகர்த்துகிறார்கள். இவை தீவிர வலதுசாரி மற்றும் வலதுசாரி ஜனரஞ்சக சித்தாந்தங்களின் மிக உடனடியாக அடையாளம் காணக்கூடிய அம்சங்களாகும்.

இதற்கு ஓர் உதாரணத்தை நோக்கலாம். 2014இல் கலிபோர்னியாவில் ஆறுபேரை கொலைசெய்த அதிவலது கொலையாளி எலியட் ரோட்ஜர், மலேசிய வேர்களைக் கொண்டிருந்தார். அவரது தாயார் சீன இனத்தைச் சேர்ந்த மலேசியர்; அவரது தந்தை வெள்ளை பிரிட்டிஷ். ரோட்ஜர் தனது சிக்கலான இன அடையாளம் மற்றும் ஆண்மையை இலட்சியப்படுத்துவது பற்றிய ஆழமான சமூக கவலைகளால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

அதே நேரத்தில் அவர், தீவிரமான பெண் வெறுப்பைக் கொண்டிருந்தார். அவரது அறிக்கையானது, அவரது ஆசிய அடையாளத்தை நிராகரித்தது. வெள்ளை மேலாதிக்கத்தை உள்வாங்கியதைப் பிரதிபலித்தது. அவ்வறிக்கை இனப் படிநிலைக் கருத்துடன் ஆரோக்கியமற்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது.

கலாசாரம் குறித்த அதீத கரிசனையும், கலாசாரம் நெருக்கடியில் இருக்கிறது. கலாசாரம் பாதுகாக்கப்பட வேண்டியது என்ற கவலையும் ஒருங்கே பலரை அதிவலதுடன் இணைகின்றது. அதற்கு சமூகவலைத்தளங்களில் பகிரப்படும் செய்திகள், படங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. அவற்றில் பெரும்பான்மையானவை தவறானவையாக இருந்தபோது அப்புரிதல் பொதுவில் மக்களுக்கு இருப்பதில்லை. அவர்கள் அத்தகவல்களைக் கண்டு உணர்ச்சிபொங்கி இன்னும் பலருக்கு அச்செய்தியைப் பகிர்கிறார்கள். இவ்வாறுதான் அதிவலது தனது ஆதரவுத்தளத்தைப் பெற்றுக்கொள்கிறது.

இளைஞர்களை கவருகின்ற மூன்றாவது அம்சம் மிக முக்கியமானது. இது அதிவலதின் 'தாயகம்' என்ற பழைமைவாத கற்பனாவாதத்தில் கவனம் செலுத்துகிறது. இது உண்மையாக தேசியவாதிகளின் முக்கியமான களம். அங்கு அவர்கள் தேர்ந்தெடுத்த மதம் உயர்ந்ததாக இருக்கும். மற்றும் பாரம்பரிய மதிப்புகள் எந்தவொரு வெளிப்புற தாக்கத்தினாலும் சவால் செய்யப்படாத, கறைபடாத மற்றும் அழிக்கப்படாமல் இருக்கும்.

இத்தாயகத்திற்கு ஊறுவிளைவிப்பர்கள், வெளிநபர்கள், இத்தாயகத்தைக் கேள்விக்குட்படுத்துபவர்கள் அனைவருமே அதிவலதின் எதிரிகளாகிறார்கள். தாயகம் என்ற அதிவலதின் சித்தாந்தத்தை எதுவித கேள்விகளுமின்றி ஏற்றுக்கொண்டவர்கள், போற்றுபவர்கள் 'தேசபக்தர்கள்'. எதிர்க்கேள்வி கேட்பவர்கள், ஏற்கமறுப்பவர்கள், விமர்சிப்பவர்கள் 'துரோகிகள்'. சாமுவல் ஜோன்சனின் 'தேசபக்தி, அயோக்கியர்களின் கடைசிப் புகலிடம்' என்ற வரிகளை இங்கு நினைவூட்டுவது பொருத்தம்.

நான்காவதாக, தென்கிழக்கு ஆசியாவில் உள்ள அதிவலது அரங்காடிகளும் தீவிர தேசியவாதிகளும் 'விழிப்பு', 'பெண்ணியம்', 'மனித உரிமைகள்' ஆகியவை பாரம்பரிய ஆசிய மதிப்புகளுக்கு இணங்காத மற்றும் அவற்றுடன் ஒத்துப்போகாத தாராளவாத மேற்கத்திய கசப்பு என்று விளக்கமளிக்க முயலுகின்றனர்.

ஆணாதிக்க கடுந்தேசியவாத கடும்பழைமைவாத மதிப்புகள் செல்வாக்குப் பெற்றுள்ள பகுதிகளில் இந்தப் பிரசாரம் வெற்றியளிக்கிறது. இது நகர்புறமாக அன்றி கிராமப்புற இளைஞர்களைக் கவர்வதற்கான முக்கிய அம்சமாயுள்ளது. பாரம்பரிய சமூகச் சிந்தனைகளில் இருந்து விடுபடும் புதிய கருத்தாக்கங்கள் அவர்களை சங்கடத்துக்கு உள்ளாக்குகின்றன. 'சமூகத்துக்கு ஒவ்வாத' என்ற அதிவலதின் கதையாடல் இவர்களை ஈர்க்கிறது. அதேவேளை மேற்சொன்ன தாயகம் குறித்த கற்பனை, கலாசாரம் குறித்த கரிசனை ஆகிய இரண்டும் இக்கதையாடலுக்கு வலுச்சேர்க்கின்றன.

மறுபுறத்தில், இந்தக் கதையாடல் பெரும்பாலும் தங்கள் சொந்த அரசியல் நிகழ்ச்சி நிரலை எதிர்க்கும் எந்தவொரு பார்வையையும் கட்டுப்படுத்தும் தணிக்கை செய்யும் எதேச்சாதிகார அரசியல் நிறுவனங்களின் முயற்சிகளுடன் ஒன்றுடன் ஒன்று இணைகின்றது. இதன் காரணமாக, தேச அரங்காடிகளின் நலன்கள் பாதுகாக்கப்படுவதற்கு அதிவலது உதவுகிறது.

## கடிதங்கள்

### குரங்குபாஞ்சான் குளத்தை புனரமைக்கவும்

திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா, குரங்குபாஞ்சான் குளத்தின் குளக்கட்டு பெரிதும் சேதமடைந்து வருவதால், புனரமைத்து தருமாறு அப்பகுதி விவசாயிகள் கோருகின்றனர்.

கடந்த ஒரு மாதத்துக்கு முன்னர் ஏற்பட்ட மழை, சூறாவளி காரணமாக குளத்தின் குளக்கட்டு, சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் இடிந்துள்ளதுடன் தொடர்ந்தும் இடிந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குளக்கட்டை புனரமைக்க அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நிதி போதாமல் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இக்குளத்தின் பாதிப்பால் 500க்கும் மேற்பட்ட வேளாண்மை செய்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதியிலுள்ள விவசாய சம்மேளனங்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர்.

குரங்குபாஞ்சான் குளத்தின் நிலைமை தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்தபோது, அவர்கள் உடனடியாக வந்து குளத்தை பார்வையிட்டு, அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு, இக்குளத்தை புனரமைக்க 37 மில்லியன் ஒதுக்கியுள்ளார்கள். ஆனால், இக்குளம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால், ஒதுக்கீடு செய்த பணம் போதாது என நீர்பாசன திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விவசாயிகளுக்கு முக்கிய தேவை என்பதால் அரசியல்வாதிகளோ அல்லது தனியார் நிறுவனமோ இக்குளத்தை பூரணப்படுத்தி தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

–எப். முபாரக்



# தலைவர்களை உருவாக்கும் மாற்றத்துக்கு பவர் முன்னுரிமை

ஏபவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் நிறுவனம், தனது ஊழியர்களை மையப்படுத்தி, புதிய பணியிடச் சூழல் மற்றும் புதிய சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் அவர்களின் ஆற்றல்களைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

பவர் நிறுவனத்தில் சகல ஊழியர் அனுபவ செயற்பாடுகளையும் முன்னெடுப்பதில், சாதாரண வியாபாரச் செயற்பாடுகள் மற்றும் ஊழியர்களின் நிபுணத்துவ செயற்பாடுகள் போன்றன அடங்கியிருப்பதுடன், அவற்றை மேற்கொள்வதில் நிறுவனத்தின் மனித வளங்கள், நிர்வாகம், கொள்முதல் மற்றும் நிலைபேறாண்மை போன்ற செயற்பாடுகளுக்கான பிரதி பொது முகாமையாளர் கென் விஜயகுமார் ஈடுபட்டுள்ளார். இவர், நாட்டில் மனித வளங்கள் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கான முன்னணி நிபுணத்துவ அமைப்பான, இலங்கை பட்டைய நபர்கள் முகாமைத்துவ நிறுவகத்தின் (CIPM) தற்போதைய தலைவராக திகழ்கின்றார். இலங்கை CEO சஞ்சிகையினால், 2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த மனித வளங்கள் வியாபாரத் தலைவராக கென் கௌரவிக்கப்பட்டிருந்தார்.



பவர் அண்மையில், இலங்கையில் சிறுவர் ஆதரவு அனுகூலத்தை முதன் முதலில் அறிமுகம் செய்திருந்தது. அதிகரித்துச் செல்லும் பொருளாதாரச் சவால்களுக்கு மத்தியில், ஊழியர்களுக்கு பெருமளவில் அனுகூலமளிக்கும் வகையில் இது அமைந்திருக்கும். நிறுவனம் தொடர்ந்தும் அதன் ஊழியர்களில் கவனம் செலுத்தி வருவதுடன், தொற்றுப் பரவல் காலப்பகுதியில், அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலான நடவடிக்கைகள் முதல், பல்வேறு நன்கொடைகள் மற்றும் உளவியல் நலன்பேணும் திட்டங்களையும் முன்னெடுத்திருந்தது.

சில செயற்பாடுகளில் 15 நாட்களுக்கான பெற்றோர் விடுமுறை, நிவாரணம், புதிய வாய்ப்புகள் எழும் போது, உள்ளக திறன் பகிர்வுக்கு முன்னுரிமை அடங்கலாக ஊழியர்களுக்கு கைகொடுக்கும் திட்டங்கள், பெறுமதி வாய்ந்த வரவேற்பு பொதிகள் அடங்கலாக, துரிதமாக உள்வாங்கல் மற்றும் ஒன்றிணைப்புத் திட்டங்கள், சுய சேவை வசதிகளினூடாக, தினசரி சிற்றுண்டிகளை கொள்வனவு செய்யக்கூடிய பெறுமதிப் பெட்டிகள் போன்றன அடங்கியுள்ளன. கூர்மையாக செவிமடுத்தல், ஈடுபாடுகளைப் பேணல் மற்றும் சகல ஊழியர்களின் மைல்கல் சாதனைகளான பிறந்தநாட்கள், வருடப்பூர்த்திகள் மற்றும் சாதனைகள் போன்றவற்றை உள்ளக நாளிகைகளான Yammer ஊடாக கொண்டாடல் போன்றவற்றை பவர் முன்னெடுக்கின்றது. இதற்கு மேலாக, உயர் ஊழியர் பெறுமதி வகைப்படுத்தலுக்காக சமூக ஊடக பிரசன்னத்தையும் கொண்டுள்ளது.

ஊழியர் வளர்ச்சி மற்றும் வெற்றிகரமான செயற்பாடுகள் போன்றன புகழ்பெற்ற 9 அடுக்கு கட்டமைப்பின் அடிப்படையில் அமைந்துள்ளதுடன், இதனூடாக நபர் ஒருவரின் வினைத்திறன் மற்றும் வாய்ப்புகள் போன்றவற்றினூடாக, அதிகளவு வெளிப்படைத்தன்மை மற்றும் மேலதிகாரிகளின் பக்கசார்புடைய தன்மையை அகற்றல் போன்றவற்றை வழங்கும்.

கடந்த ஆண்டு, பவர் நிறுவனத்தினால், பவர் தலைமைத்துவ ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டம் (BLG) அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. ஊழியர்களுக்கான பரிபூரண பயிற்சி மற்றும் விருத்தியை பெற்றுக் கொடுத்து, வியாபார வளர்ச்சியுடன், விரிவாக்கல் திட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கு எதிர்காலத்தில் தலைமைத்துவ பொறுப்புகளை ஏற்கச் செய்யும் இலக்குடன் அமைந்துள்ளது. AIESEC Association internationale des □tudiants en sciences □conomiques et commerciales (பொருளியல் மற்றும் வணிகம் ஆகியவற்றிலுள்ள மாணவர்களுக்கான சர்வதேச சம்மேளனம்) உடன் பவர் கைகோர்த்து, இளம் தலைமைத்துவப் பண்புகளை, பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மேம்படுத்தி, திட்டமிடப்பட்ட தொழிற்பயிற்சிகளை ஏற்படுத்தி தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க முன்வந்திருந்தது.

நபர் ஒருவரின் பிரத்தியேக வளர்ச்சியில் நிறுவனம் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளதுடன், ஊழியர்களை உயர் கல்வியை தொடரச் செய்யவும், நிபுணத்துவ தகைமைகளைப் பெற்றுக் கொள்ளவும் வசதி வாய்ப்புகளை வழங்குகின்றது. நிர்வாகப் பிரிவுகளிலுள்ளவர்களுக்கும், உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் காணப்படும் பல்வேறு நிபுணத்துவ அமைப்புகளில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ள உதவியாக அமைந்துள்ளது. இதில், அலுவலக காப்பாளர் பதவிகளை ஏற்றலும் அடங்கியுள்ளன. விசேடத்துவமான கூட்டாண்மை மற்றும் சமூக பண்பு நிகழ்ச்சிகள் போன்றவற்றில் பங்கேற்கக்கூடிய வகையில் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில், பவர் நிறுவனம் தனது பவர் டோஸ்ட்மாஸ்டர் கழகத்தை (BTC) உத்தியோகபூர்வமாக நிறுவியிருந்தது. கொழும்பு டோஸ்ட்மாஸ்டர்ஸ் கழகத்தின் வழிகாட்டல்களின் கீழ் இந்த கழகம் நிறுவப்பட்டதுடன், நிறுவனத்தினால் அங்கத்துவம் பெறப்பட்டுள்ளது. இதனூடாக, ஊழியர்களுக்கு தமது பொதுப் பேச்சுத்திறனை மேம்படுத்திக் கொள்ளவும், சுய நம்பிக்கையை கட்டியெழுப்பிக் கொள்ளவும் முடியும் என்பதுடன், பரந்தளவு தொடர்பாடல் பண்புகளை மேம்படுத்திக் கொள்ளவும் முடியும்.

# Dialog Star Points மூலம் ‘Little Hearts’ திட்டத்துக்கு நன்கொடை




இலங்கையிலுள்ள குழந்தைகளின் வாழ்க்கையில் நீடித்த நல் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில், 450,000க்கும் அதிகளவான டயலொக் வாடிக்கையாளர்கள் ஒன்றிணைந்து 2022 ஆம் ஆண்டில் ‘Little Hearts’ (லிட்டில் ஹார்ட்ஸ்) முன்முயற்சிக்கு Star Points (ஸ்டார் பொயின்ட்ஸ்) மூலம் ரூ.27 மில்லியன் நன்கொடையை வழங்கியிருந்ததாக டயலொக் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினூடாக, 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை Star Points மூலம் இந்த முயற்சிக்கு ஒட்டுமொத்தமாக ரூ.122 மில்லியன் நன்கொடை அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

‘Little Hearts’ முன்முயற்சியானது இலங்கை குழந்தை நல மருத்துவர்கள் கல்லூரியால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஒரு திட்டமாகும். இதயநோய்கள் மற்றும் தீவிர நோய்களின் தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ள சிறுவர்களின் நலனை மேற்கொண்டு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் நான்கு இருதய சிகிச்சை கூடங்களை கொண்டதான 12 அடுக்கு மாடி வளாக அமைப்பை முன்னெடுத்து மேம்படுத்தும் நோக்கிலேயே இந்த நிதியுதவி அளிக்கப்படுகின்றது. ஒரு வடிகுழாய் ஆய்வகம், 100 க்கும் மேற்பட்ட இதய கோளாறுகள் மற்றும் புதிதாக பிறந்த குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை படுக்கைகள், எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை அலகு, மற்றும் மேம்படுத்தப்பட்ட இதய ஆய்வு மற்றும் பயிற்சி வசதிகள் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக இந்த அடுக்குமாடி அமைந்திருக்கும். இக்கட்டட கட்டுமானப் பணிகளுக்கு ரூ.4 பில்லியன் ரூபாய்க்கு மேல் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அதற்கு கைகொடுக்கும் உன்னத நோக்கில் ஒவ்வொரு வருடமும் டயலொக் இதற்கான நன்கொடை வழங்கல் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகின்றது. அதற்கமையவே டயலொக் வாடிக்கையாளர்கள் தங்களின் விருப்பமான தொண்டு நிறுவனத்திற்கு தமது Star Points களை நன்கொடையாக வழங்கும் பரோபகார முயற்சியின் மூலம் இலங்கை வாழ் மக்களின் வாழ்வை வலுவூட்டுவதற்கும் வளப்படுத்துவதற்குமான ஏற்பாட்டை டயலொக் செயற்படுத்தி வருகின்றது.


இதன்போது உரையாற்றிய டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதான செயற்பாட்டு அதிகாரி லசந்த தெவெரப்பெரும □எங்கள் Dialog Star Points வாடிக்கையாளர்களின் பெருந்தன்மையையிட்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளோம். Star Points நன்கொடைகள் பலரின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவ மனையில் நான்கு இருதய சிகிச்சை கூடங்களை கொண்டதான 12 அடுக்கு மாடி வளாகத்தின் கட்டுமானத்தின் முன்னெடுப்பிற்கு அளிக்கப்பட்டு வருகின்ற நன்கொடைகளின் எண்ணிக்கை சமூகத்தின் சக்திக்கு ஒரு சான்றாகும். இதய கோளாறுகளை எதிர்த்துப் போராடும் சிறுவர்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் திறன் சிறந்த மருத்துவ பராமரிப்புக்கான உரிமைக்கு தகுதியானவர்களாக எங்கள் வாடிக்கையாளர்களின் பங்களிப்பு எடுத்துக் காட்டுகின்றது. நமது வாடிக்கையாளர்களுக்கும் இத்தகைய உன்னத பணியில் பங்கெடுக்க நமக்கு வழங்கப்பட்ட வாய்ப்பிற்காகவும் நன்றியுடையவர்களாக உள்ளோம் என்றார்.

# இந்திய அளவில் ட்ரெண்ட் ஆன #HBDMKStalin70

நேற்றுமுன் தினம் (01) திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாட்டின் முதலமைச்சருமான எம். கே.ஸ்டாலின், தனது 70 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார்.

அந்தவகையில் நேற்று முன்தினம் முதல் தி.மு.க கட்சியைச் சேர்ந்தவர்கள், அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் முதலமைச்சருக்கு ‘எச். பி.டி. எம்.கே.ஸ்டாலின் 70’ (#HBDMKStalin70) என்ற ஹேஷ்டேக்கைப் பயன்படுத்தி டுவிட்டரில் வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் ஏராளமானோர் டுவிட்டரில் வாழ்த்துத் தெரிவித்து வருவதால் இந்திய அளவில் குறித்த ஹேஷ்டாக்கானது டிரெண்டிங்கில் முதலிடம் பிடித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## ஆந்திரா

# சிறுவனை வைத்து ‘ATM‘ யில் கொள்ளை



7 வயதான சிறுவனை வைத்துக் கும்பலொன்று ‘ATM‘ யில் கொள்ளையடிக்க முயற்சி செய்த சம்பவம் ஆந்திர மாநிலத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர மாநிலம், திருவூரில் உள்ள கூட்டுறவு வங்கியின் `ATM` மையத்திலேயே நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தினத்தன்று குறித்த சிறுவனுடன் `ATM` மையத்திற்குள் நுழைந்த 3 பேர் அங்கிருந்த இயந்திரத்தை உடைத்து பணத்தினைக் கொள்ளையடிக்க முயற்சி செய்துள்ளனர்.

எனினும் இயந்திரத்தின் மூடியை மாத்திரமே அவர்களால் உடைக்க முடிந்துள்ளது எனவும், பணம் உள்ள லொக்கரை உடைக்க முடியாமல் அவர்கள் திணறியுள்ளனர் எனவும் கூறப்படுகின்றது.

இதனால் தமது முயற்சியைக் கைவிட்ட அவர்கள், குறித்த சிறுவனை அழைத்துக்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இந்நிலையில் காலையில் ‘ATM`இயந்திரம் உடைக்கப்பட்டு இருப்பதைக் கண்ட வாடிக்கையாளர்கள் பொலிஸ் நிலையத்திற்குத் தகவல் தெரிவித்தனர்.

இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் சி.சி.டிவியில் பதிவான காட்சிகளைக் கொண்டு கொள்ளையர்களைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

## ராஜஸ்தான்

# பச்சிளம் குழந்தையின் உயிரைப் பறித்த நாய்

### வைத்திய சாலையில் கொடூரம்



தெருநாய்கள் கடித்துக் குதறியதில் பச்சிளம் குழந்தையொன்று உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ராஜஸ்தானில் உள்ள அரச வைத்தியசாலையொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று குறித்த வைத்திய சாலையில், காசநோய் சிகிச்சைக்காக வந்திருந்த தாயொருவர் தனது 1 மாத பச்சிளங் குழந்தையைத் தொட்டிலில் போட்டு விட்டு ஆழ்ந்து உறங்கியுள்ளார்.

இதன்போது அங்குவந்த சில தெரு நாய்கள் குறித்த குழந்தையை இழுத்துச் சென்று கடித்துக் குதறியுள்ளன.

அதேசமயம் உறக்கம் கலைந்து எழுந்த தாய், அருகில் இருந்த குழந்தை, காணாமற் போனதைக் கண்டு அதிர்ச்சியடைந்து, இது குறித்து வைத்திய சாலை நிர்வாகத்தினருக்கும் பொலிஸாருக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து அங்குவந்த பொலிஸார் மருத்துவமனை வளாகத்தில் இருந்த கண்காணிப்பு கெமராக்களை ஆய்வு செய்தபோது, அங்கு சுற்றித்திரிந்த இரண்டு தெரு நாய்கள், குழந்தையை வெளியே இழுத்துச் சென்றிருந்தமை தெரியவந்துள்ளது.

இதற்கிடையே நாய்கள் கடித்து க் குதறியதில், அக்குழந்தையானது சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இதுகுறித்து பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## பீகார்

# மனைவியைப் பழிவாங்க இப்படியா செய்வது?



பீகாரில் ககாரியா மாவட்டத்தில் ஹர்தியா கிராமத்தில் வசித்து வருபவர் நீரஜ். இவருக்கு கடந்த 2009ஆம் ஆண்டு ரூபி தேவி என்பவருடன் திருமணம் நடைபெற்றுள்ளது. இத் தம்பதிக்கு 4 பிள்ளைகள் உள்ளனர்.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ரூபிக்கு முகேஷ் என்பவருடன் தகாத உறவு இருப்பது நீரஜுக்குத் தெரிய வந்துள்ளது.

பஸ்ராஹா கிராமத்தில் வசிக்கும் முகேசுக்கும் திருமணம் ஆகி 2 குழந்தைகள் உள்ள நிலையில், முகேஷ் மற்றும் ரூபி இருவரும் கடந்த ஆண்டு திருமணம் செய்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில் தனது மனைவியைப் பழிவாங்கும் நோக்கத்தில் நீரஜ், முகேசின் மனைவியுடன் தொடர்பை ஏற்படுத்தி வந்துள்ளார்.

இந்நிலையில் நாளடைவில் இருவருக்கும் காதல் மலரவே இருவரும் திருமணம் செய்துகொண்டுள்ளனர்.

இதனையடுத்து முகேசின் 2 குழந்தைகள் மற்றும் தனது ஒரு குழந்தை என 3 குழந்தைகள் நீரஜிடமும், நீரஜின் 3 குழந்தைகள் முகேசுடனும் வளர்ந்து வருகின்றன.



## மத்திய பிரதேசம்

# ரயில் குண்டு வெடிப்பு: 7 பேருக்கு மரண தண்டனை

மத்திய பிரதேசத்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு போபால் - உஜ்ஜயின் ரயிலில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 10 பேர் படுகாயமடைந்தனர்.

இதனையடுத்து இச்சம்பவம் தொடர்பில் 8 பேரைப் பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் இது தொடர்பான வழக்கு லக்னோ நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்த நிலையில அண்மையில், அதில் 7 பேருக்கும் மரண தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

## உத்தர பிரதேசம்

# பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தவர் கொடூரக் கொலை

பொலிஸாருக்கு ரகசியத் தகவல் வழங்கிய நபரொருவர் கொடூரமாகக் கொலைசெய்யப்பட்ட சம்பவம் உத்திரபிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரபிரதேசத்தின் அலிகார் நகரைச் சேர்ந்தவர் ‘நூருல் ஹசன்‘. இவர் பொலிஸாருக்குத் துப்பு கொடுக்கும் உளவாளியாகச் செயற்பட்டு வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம்(01) இரவு அவருடைய சகாக்கள் 4 பேர் ஹசனை மது பான சாலையொன்றுக்கு அழைத்துச் சென்று அவரை மது அருந்த வைத்துள்ளனர்.

அதன் பின்னர் ”தம்மை நம்பிக்கைத் துரோகம் செய்ததாகக் கூறி” அவரைக் கத்தியால்குத்தி கொடூரமாகக் கொலை செய்துள்ளனர்.



மக்கள் நெரிசல் மிகுந்த பகுதியில் நடந்த இக்கொலை சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சொக்கும் வரை காத்திருப்பு சுகம்





கிசோபனா சுந்தரலிங்கம்
(ஊடகக்கற்கைகள் துறை
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்)

நாம் எங்கு பிறந்து வளர்ந்தோமோ அந்த இடம் நமக்கு சொர்க்கம் தான். ஒவ்வொருவருக்குமே அவர்கள் வாழ்ந்து வந்த ஊர் சிறப்பான இடம் தான். 'சொர்க்கமே என்றாலும் அது நம்ம ஊர போல வருமா? எந்நாடு என்றாலும் அது நம் நாட்டுக்கீடாகுமா?' என்ற பாடல் வரியானது ஊரின் சிறப்பினை எடுத்துக்காட்டுகிறது. கிராமம் என்றாலே, நீர் நிறைந்த குளங்கள், வயல் வெளிகள், அழகிய கோவில்கள் போன்றவை கண்களுக்கு இதமானவையாகக் காட்சியளிக்கும். அதுவே எனது ஊர் அளவெட்டி (யாழ்ப்பாணம்) என்றார் கந்தசாமி, அவரிடம் சிலநிமிடங்கள் கதைகொடுத்த போது, பல சுவாரஸ்யமான கதைகளை கூறினார். அதிலொன்றை உங்களுடன் பகர்ந்துகொள்கின்றேன்.

சில நேரங்களில் இக் கிராமமே எமக்கு தொழில் வாய்ப்புகளையும் பெற்றுக்கொடுக்கின்றது. என்ன தொழில் வாய்ப்பு என்று தானே கேட்கிறீர்கள்? 'அந்தி வண்ண வானத்தை நிழல் படம் எடுத்து காட்டி என் இதயத்தை நனைத்த படி வரவேற்கும் அந்தக் குளம்' ஏனக்கு தொழிலைக்கொடுத்த குளம். சிறுவயதில் இருந்தே குளக்கரைக்கு செல்வது எனது வழமையான பழக்கம்.

"அம்மா சமைத்துக்கொண்டு இருக்கும் போது அவர்களுக்குத் தெரியாமல் சோறு எடுத்துக்கொண்டு வந்து குளத்திற்குள் போட்டு நானும் எனது நண்பனும் சாறியை இரு மூலைகளிலும் பிடித்து மீன்களை பிடித்து, அவற்றை போத்தலினுள் இட்டு அதனை வீடு கொண்டு சென்று கிணற்றுக்குள் அல்லது மீன் தொட்டிகளில் போட்டு வளர்ப்போம். நாங்கள் மீன்தொட்டிகளை அழகுபடுத்துவதற்கு குளங்களுக்குள் இருக்கின்ற ஐதரில்லாவினையும் எடுத்துச் செல்வோம்.

மீன்களுக்கான உணவாக கடைகளில் மீன்மாஸ்களைப் வாங்கிப்போடுவோம். மீன்களுக்கான உணவை வாங்குவதற்கு வீட்டில் காசுகளைச் சிறுக சிறுகசேமித்து வாங்குவதுண்டு. காசு கிடைக்காவிட்டால் சோற்றினை மீன்களுக்கு உணவாக போடுவோம். சில வேளைகளில் கிணற்றுக்குள் மீன்களை கொண்டு வந்து விடுவோம்.

கிணற்றுக்குள் மீன்கள் இருக்கின்ற போது அவை கிணற்றுப் பாசி, சேறுகளை உணவாக உட்கொள்கின்றன. இதனால் கிணறு சுத்தப்படுத்தப்படுவதாக கூறுகின்ற அதேவேளை அவை சேற்றினை மிகையாக கிளறுகின்றபோது அவை பாவனைக்கு உகந்தவையற்றுப் போகின்றன. இவ்வாறு செய்து அம்மாவிடம் அடியும் வாங்கியிருக்கிறேன். அந்த காலத்தை நினைக்கும் போது மனதுக்கு இதமாகத் தான் இருக்கின்றது" என்றார்.

"நான் எட்டாம் ஆண்டு வரை படித்தேன். தனது தந்தை பதநீர் (கள்ளு) எடுத்து அதனை விற்கும் வேலையைச் செய்து வந்தார். தந்தை செல்கின்றபோது அவருடன் சென்று பார்த்துக்கொண்டு இருப்பேன். பின்னர் அந்த வேலையை நானும் செய்யத் தொடங்கிவிட்டேன். நேரம் கிடைக்கின்ற போது குளக்கரைக்கு

**கிணற்றுக்குள் மீன்கள் இருக்கின்ற போது அவை கிணற்றுப் பாசி, சேறுகளை உணவாக உட்கொள்கின்றன. இதனால் கிணறு சுத்தப்படு–த்தப்படுவதாக கூறுகின்ற அதேவேளை அவை சேற்றினை மிகையாக கிளறுகின்றபோது அவை பாவனைக்கு உகந்தவையற்றுப் போகின்றன**

**என்னால் முடியும் வரைக்கும் இத் தொழிலை செய்து எனது குடும்பத்தை பார்த்துக்கொள்வேன். யாரிடமும் எந்தக் கடனும் வாங்காது நிம்மதியாக இருப்பதாக உணருகிறேன்**

சென்று மீன்களைப்பிடித்து வந்து விற்றுவிட்டு, மிச்சத்தை வீட்டிற்கு கொண்டு சென்று சமைத்து சாப்பிடுவோம்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் எமது சமுதாயத்தில் குளத்து மீன்களை நாடுபவர்கள் குறைவு. யுத்த காலத்தில் பொருளாதார நெருக்கடிகளை சந்தித்த வேளைகளில் நாம் குளத்து மீன்களைத் தான் சாப்பிட்டு உயிர் வாழ்ந்தோம். ஆனால் இப்போது ஆற்று மீன்கள், நன்னீர் மீன்கள், கடல் மீன்களைத் தான் நாடுகின்ற போக்கு உள்ளது. குளத்து மீன்களில் சத்துகள் அதிகம்; சுவையாகவும் இருக்கும். இப்படியே எனது வாழ்க்கை போயிட்டு இருந்திச்சு. பிறகு வயசு வந்ததும் கல்யாணம், பிள்ளை குட்டினு ஆகிடிச்சு. இரண்டும் பொம்பிளப்பிள்ளைகள். அவங்கள படிப்பிச்சு ஒரு மாதிரி கல்யாணம் பண்ணி கொடுத்திட்டேன்.

நானும் எனது மனைவியும் தான் இப்போது தனியாக இருக்கிறோம். பிள்ளைகள் வேற இடத்தில இருக்கிறாங்கள். பிள்ளைகளிட்ட கையேந்தி நிற்கக் கூடாது என்றது என்ட கொள்கை. எனக்கு இப்போது 70 வயதாகிவிட்டது. 65 வயதில் பதனீர் எடுப்பதற்காக பனை மரத்தில் ஏறிய போது பனை ஓலை எனது கண்ணில் கீறியதால் எனது ஒற்றை பார்வை குறைந்து விட்டது. அதன் பிற்பாடு நான் இத் தொழிலை விட்டு விட்டேன். ஒரு வருடமாக எந்தத் தொழிலுக்கும் போகவில்லை. பின்னர் என்னால் முடிந்த சிறு வேலைகளுக்குச் சென்றேன். வயசானால் யார் வேலை தருவார்கள். அதுவும் ஒற்றைப் பார்வை குறைந்தவனுக்கு எப்படி தருவார்கள்.

எனது மனதிலிருக்கின்ற கவலைகளை குமிறுவதற்கான இடமாக குளம் தான் இருந்தது. வீட்டில் எனது மனக் கவலைகளை கொட்ட முடியாது. என்னை நம்பி ஒருத்தி இருக்கிறாள். அவளை கஸ்டப்படுத்த எனக்கு விருப்பமில்லை. அப்போது தான் எனக்கு தோன்றியது ஏன் குளத்து மீன்களைப் பிடித்து விற்கக் கூடாது என்று.

மறுநாள் காலையில் தூண்டிலை எடுத்துக்கொண்டு குளக்கரைக்கு சென்று மீன்களைப் பிடித்து சைக்கிளில் கொண்டு சென்று விற்கத் தொடங்கினேன். இப்போது எம்மவர்களுள் பல மாற்றம். குளத்து மீன்களை பெரும்பாலானோர் நுகருவதில்லை. இருந்த போதிலும் அளவெட்டியிலுள்ள இடங்களுக்கு சைக்கிள் மிதித்துச் சென்று எனக்கென ஒரு நுகர்வோர் வட்டத்தை உருவாக்கிக்கொண்டேன். என்னைப்போல கஸ்டப்பட்ட சனம் இருப்பார்கள் தானே. அவர்களுக்கு மாமிச உணவாக இக் குளத்து மீன்கள்தான் இருந்தன. பிற்பட குறித்த இடத்திற்கே சென்று விற்றுவருவேன். 'செய்யும் தொழிலே தெய்வம்' என்பார்கள். இத் தொழில் எனக்கு அப்படித் தான்.

1 கிலோ கிராம் மீன்களை விற்றால் 300-500 ரூபாய் கிடைக்கும். சில வேளைகளில் குறைவாகவும் விற்கவேண்டிவரும். குறிப்பிட்ட காலங்களில் தான் அதிகமாக மீன்களைப் பெற முடியும். பின்னர் மீன்கள் குறைந்து விடும். ஆடி, ஆவணி மாதங்களில் தண்ணீர் முற்று முழுதாக வற்றி விடும். குளத்து மீன்கள் சேற்றுக்குள் புதைந்து அதற்குள்ளேயே முட்டைகளைப்போடும். பின்னர் மழை பெய்கின்ற போது அவை பொரித்து வருகின்றன.


என்னைப்போல பலர் குளத்தை நம்பித் தான் இருக்கிறார்கள். குளத்து மீன்களைப் பிடித்து அதனை வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். எங்கட சனம் பெரும்பாலும் நாடாட்டியும் கூட வெளிமாவட்டத்து சனம் நாடுகின்றனர்.

நாங்கள் விரால், ஜப்பான், திராப்பியா, கனயா, சிலாப்பி, கெழுத்து ஆகிய மீன் இனங்களைப் பிடிக்கின்றோம். யாழ் மாவட்டத்தினைப் பொறுத்த வரையில் அதிகமான குளங்கள் காணப்பட்டன. ஆனால் இன்று பெரும்பாலான குளங்கள் அழிவடைந்தும் உபயோகப்படுத்த முடியாமலும் போயிருக்கின்றன. என்னைப் போன்றவர்களுக்கு வரப்பிரசாதமாக உள்ளூர் குளங்கள் காணப்படுகின்றன. என்னால் முடியும் வரைக்கும் இத் தொழிலை செய்து எனது குடும்பத்தை பார்த்துக்கொள்வேன். இந்தத் தொழிலும் எனக்குத் திருப்தியாகத் தான் இருக்கிறது. யாரிடமும் எந்தக் கடனும் வாங்காது நிம்மதியாக இருப்பதாக உணருகிறேன். யாரையும் நம்பி நான் இல்லை" என்றார். .

# A Separation – ஒரு பிரிவு



ச. தனுஷ்கா
ஊடக கற்கைகள் துறை,
யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்




உலக சினிமாக்களில் ஈரானிய சினிமாக்கள் தனிச்சாயலையும் தனக்கேயுரிய யதார்த்தவாத கோட்பாடுகளுடன் மிகவும் காத்திரமான திரைப்படங்களை வெளியிடுகின்றது.

அவ்வகையில், அஸ்கர் ஃபர்ஹர்டியின் இயக்கத்தில் 2011ஆம் ஆண்டு வெளியான 'A Separation' என்ற திரைப்படம், இதுநாள் வரையும் பெற்றுத்தராத புகழை இயக்குநருக்கு வழங்கியுள்ளது. சிறந்த வெளிநாட்டு திரைப்படத்துக்கான ஒஸ்கார் விருதை ஒன்றுக்கு மேற்பட்ட முறை வென்ற இயக்குநர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலில் ஃபர்ஹர்டியும் ஒருவர்.

ஃபர்ஹர்டி தனக்கேயுரிய பாணியில், திரைக்கதைகளை வழங்குபவர். மனித நிலையை மையமாக கொண்டதும் குடும்ப மோதல்களின் நெருக்கமானதும் சவாலானதுமான கதைகளையும் சமூகத்தில் விளிம்பு நிலை மக்களையும் அவர்களது வாழ்வியல் போராட்டங்களையும் சமூகத்தில் வேரூன்றிக் காணப்படும் சமயம் சார்ந்த பிற்போக்கான சிந்தனைவாதிகளை விமர்சிக்கும் பாணியிலும் யதார்த்தத்தை தனது திரைப்படங்களில் அழுத்தமின்றி வெளிப்படுத்துபவராகத் திகழ்கின்றார்.

'A Separation' எனும் திரைப்படம் வென்ற விருதுகள், இத்திரைப்படத்தின் சிறப்பம்சங்களை வெளிப்படுத்துவதாகக் காணப்படுகின்றன. அவ்வகையில் இத்திரைப்படமானது 139 உலக விருதுகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டு அதில் 89 விருதுகளை வென்றது. 2012ஆம் ஆண்டு சிறந்த வெளிநாட்டு மொழித் திரைப்படத்துக்கான அகடமி விருதைப்பெற்றது. இவ்விருதைப் பெற்ற முதலாவது ஈரானிய திரைப்படமாக A Separation அமைகிறது. ஒஸ்கார் விருதைப்பெற்ற முதலாவது ஈரானிய திரைப்படம் எனும் பெருமையையும் சூட்டிக்கொள்கிறது.

61ஆவது பெர்லின் சர்வதேச திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படத்துக்கான 'கோல்டன் பியர்' விருதையும் சிறந்த நடிகை, நடிகருக்கான 'சில்வர் பியர்' விருதையும் பெற்றது. 'கோல்டன் பியர்' எனும் விருதைப்பெற்ற முதலாவது ஈரானிய திரைப்படம் என்ற பெருமையும், இத்திரைப்படத்தையே சேரும். சிறந்த திரைப்படத்துக்கான 'கோல்டன் குலொப்' விருதை வென்றது. சிறந்த திரைப்படம் என்பதற்கு Asia Pacific Screen விருதையும் பெற்றது.

இத்தகைய பெருமைகளை தன்னகத்தே கொண்டுள்ள இத்திரைப்படமானது, வெறுமனே 800,000 அமெரிக்க டொலர் பட்ஜெட்டில் தயாரிக்கப்பட்டதாகும். ஆனால், உலகளவில் 24.4 மில்லியன் அ. டொலர் வசூலைப் பெற்றது.

இத்திரைப்படம் திரைக்கதை 123 நிமிடங்களாகும். 14 வருட திருமண பந்தம், விவாகரத்தினூடாக முடிவுக்கு வருகிறது. அவர்களது பெண் குழந்தை பெற்றோர்களில் யாரை தெரிவுசெய்யப்போகிறாள் என்பதே கதையாகவுள்ளது. இத்திரைப்படமானது Drama Mystry Genre ஆகும். பிரதான கதாபாத்திரங்களாக (Protoganist) நாடர் (கணவன், சிமின் (மனைவி), இவர்களது 11 வயதான மகள் டெர்மா, ராஸியா (பணிப்பெண்), ஹொட்ஜாத் (பணிப்பெண் ராஸியாவின் கணவன்) போன்ற கதாபாத்திரங்களாக காணப்படுகின்றன. Silent Bit Supporting ஆக அல்சமர் நோயால் பாதிக்கப்பட்ட தாத்தா கதாபாத்திரமும் Supporting Actors Atmosphere ஆக சௌமியா (பணிப்பெண் ராஸியா - ஹொட்ஜாத் தம்பதிகளின் 9 வயது மகள்), நீதிபதி, டெர்மாவின் வகுப்பாசிரியர் போன்ற கதாபாத்திரங்களும் காணப்படுகின்றன.

முதலாவது Plot - ராஸியா, அல்சைமர் நோயால் பாதிக்கப்பட்ட தாத்தாவை கட்டிலில் கட்டிச்செல்லும் இச்செயலுக்காக நாடர் கோபமுற்று ராஸியாவை வீட்டை விட்டு வெளியேற்றல். Plot 2 - நாடர் தன்னை மாடியில் இருந்து தள்ளியதால், தன் கரு கலைந்தது என ராஸியா நீதிமன்றத்தில் நாடர் மீது வழக்குத் தொடர்தல். Plot 3 - நாடர் மீது சுமத்தப்பட்ட குற்றம் பொய்யென நிரூபிக்கப்பட்டதால் அவ்வழக்கு நிராகரிக்கப்படுகிறது. சிமின் மற்றும் நாடர் விவாகரத்தைப் பெறுகின்றனர். டெர்மா பெற்றோரில் யாரை தெரிவு செய்யப்போகிறாள் என்ற எதிர்ப்பார்ப்பிலும் காத்திருப்பிலும் திரைப்படம் திறந்த முடிவாக (Open Ending) ஆக நிறைவடைகிறது.

இத்திரைப்படத்தில் பாடல்கள் என்று எதுவுமில்லை. இசையாக, பறவைகள், வீட்டுச் சூழல், வெளிச் சூழலில் இடம்பெறும் ஒலிகளே கதை முழுவதும் ஒலிக்கிறது. களங்களாக பாடசாலை, வீடு, வைத்தியசாலை, நீதிமன்றம் போன்றன அமைகின்றன. திரைப்படத்தில் முரண்பாடுகள் மனிதர்களுக்கும் மனிதர்களுக்குமிடையே இடம்பெறுகிறது. அதேபோல மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையே முரண்பாடுள்ளது. ஈரானிய சமூகத்துக்கும் சமய ரீதியான கட்டுப்பாடுகளுக்கும் சிமின் ஒத்துச் செல்லவில்லை. அதே போல் சிமின் - நாடர் முரண்பாடு, நாடர் - ராஸியா, ராஸியா - ஹொட்ஜாத் முரண்பாடு என ஒவ்வொரு கதாபாத்திரங்களுக்கும் ஏதோ ஒரு வகையில் முரண்படுவதாக கதையோட்டம் உள்ளது.

இந்தத் திரைப்படமானது Handy cam (Hand help camera) மூலம் ஒளிப்பதிவு செய்யப்பட்டது. இன்றைய நவீன காலத்தில் அதனை தொழிநுட்ப வசதிகள் வளர்ச்சியடைந்தும் காத்திரமான படைப்புகள் உலகளவில் வெற்றியை அடைவதென்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல. ஆனால், இயக்குநர் கையாண்ட கமெரா தொழில்நுட்பம் வியக்க வைத்துள்ளது.

கதாபாத்திரங்களை பின் தொடர்வது போல, கமெரா கோணங்களும் அசைவுகளும் பல இடங்களில் காணப்படுகின்றன. இன்னொரு சிறப்பம்சமாக, ஒரே நேரத்தில் இரண்டு வெவ்வேறு இடம் சார்ந்த காட்சிகளைப் பற்றிய போதுமான தகவலை வழங்குவதற்குவதாகவும் அமைகிறது. படத்தில் காட்சியொன்றில் மேசைக்குப் பின்னால் அமர்ந்து தனது தாயை நினைக்கும் சிறுமியின் உருவத்தைப் பார்ப்பதாகவும் மறுபுறம், அவளது அம்மா அவளை விட்டு வெளியேறுகிறாள். அதே ஜன்னலில், அன்னையின் உருவம் தெரிகிறது. இத்தந்திரம் தொழில்நுட்ப காரணங்களுக்காக மட்டுமல்ல, மனச்சோர்வு மற்றும் அழுத்தமான தொனியை வலுப்படுத்தவும் பலமுறை பயன்படுத்தப்படுகிறது. மேலும், ஒருவரை ஒருவர் பிரிந்து வாழப்போகும் மனிதர்களது நிழல்களைப் பிரதிபலிப்பதாக ஜன்னல் காட்சிகள் அமைந்துள்ளன.

இத்திரைப்படத்தின் கதைக் கருவோ, அதில் காணப்படும் கதாபாத்திரங்களோ யதார்த்தத்தையும் ஈரானிய சமூகம் மற்றும் மதப்பிளவுகளையும் வெளிப்படுத்துகிறது. நடிகர்களது யதார்த்தமான நடிப்பு ஒவ்வொரு கதாபாத்திரத்துக்குள் காணப்படும் ஆழமான குணாதிசயங்களை வெளிக்கொணரச் செய்கிறது. இங்கு முக்கியமான கதாபாத்திரங்களான சிமின், நாடர், டெர்மா, ராஸியா, ஹொட்ஜாத் போன்ற ஐந்து முக்கிய நடிகர்களும் கூர்மையாக கவனிக்கப்படுகின்றனர்.

படத்தின் காட்சிகள், ஆரம்பம் முதல் முடிவு வரை பார்வையாளர்களை பதட்டமாக வைத்திருக்கிறது. மிக முக்கியமாக இத்திரைப்படத்தில் எந்தக் கதாபாத்திரமும் எதிர்மறையான கதாபாத்திரம் எனக் கூற முடியாது. ஏனெனில் ஒவ்வொரு கதாபாத்திரமும் தாம் ஆற்றும் காரியங்களுக்கான நியாயப்படுத்தலை கொண்டிருக்கும். ஒவ்வொருவரும் தமக்கான சிறப்பான வாழ்க்கையை வாழுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதும் அதன்போது எதிர்பாராமல் இடம்பெறும் சிக்கல்கள், சவால்களை எதிர்கொள்வதாக திரைப்படம் நகர்கிறது.

இயக்குநர் ஒவ்வொரு கதாபாத்திரத்தின் நோக்கு நிலையில் இருந்து, திரைக்கதையை உருவாக்கியுள்ளார். மேலும், மிக முக்கியமான செய்தியையும் இயக்குநர் பார்வையாளர்களுக்கு விட்டுச் செல்கிறார். அதாவது பெற்றோர்களது முரண்பாடுகள், அவர்களது பிரிவு என்பன, அவர்களது குழந்தைகளை மனரீதியாக எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்றும் குழந்தைகளால் அனைத்தையும் இலகுவாக உள்வாங்க முடியும்; அதேநேரம் அவற்றை இலகுவில் வெளிப்படுத்தாது தமக்குள்ளேயே வைத்துக்கொண்டு, உளரீதியாக பாதிப்படைவர். இதற்கு சிறப்பான எடுத்துக்காட்டாக கதையில், டெர்மா எனும் 11 வயதான சிறுமியும் சௌமியா என்ற 9 வயதான சிறுமியும் அவர்களது உளப்போராட்டங்களையும் பெற்றோர்கள் பிரியாது மீண்டும் இணையமாட்டார்களா என்ற எதிர்பார்ப்பையும் மிகவும் தத்ரூபமாக இயக்குநர் வெளிப்படுத்தியுள்ளார்.

திரைப்படத்தின் தலைப்பான 'A Separation' - 'பிரிவு' என்பது கணக்கச்சிதமாக உள்ளது. பிரிவானது முதன்நிலைப்படுத்தப்பட்டதாக உள்ளது. பார்வையாளரது எதிர்பார்ப்பானது கதையில் டெர்மாவின் எதிர்பார்ப்பாக உள்ளது. முதலாவது பிரிவாக கணவன் - மனைவி பிரிவு நிகழ்கிறது. அடுத்ததாக பணிப்பெண்ணான ராஸியா தனது கருவிலேயே குழந்தையை பிரிகிறாள். கூட்டுக் குடும்பமாக இருந்த குடும்பம் பிரிந்து தனிக்குடும்பமாகிறது. பெற்றோர்களில் ஒருவரை டெர்மா பிரிய நேரிடுகிறது. இவ்வாறு பிரிவு முதன்மையானதாகவே கதையில் காணப்படுகிறது. ஏனைய படைப்புகளைப் போல இயக்குநர், கணவன் - மனைவிக்கு இடையே சமாதானத்தையும் சுப முடிவையும் திணிக்க விரும்பவில்லை. நிகழ இருக்கும் யதார்த்தத்தை கதையின் ஆரம்ப காட்சிகளிலேயே காட்சிப்படுத்தியுள்ளார். பிரிவு இங்கு உறுதியாகவுள்ளது.




இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில்

# 88 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற அவுஸ்திரேலியா

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்டில், தமது முதலாவது இனிங்ஸ் முடிவில் அவுஸ்திரேலியா 88 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

அவுஸ்திரேலியா சார்பாக உஸ்மான் கவாஜா 60, மர்னுஸ் லபுஷைன் 31, பதிலணித்தலைவர் ஸ்டீவ் ஸ்மித் 26 ஓட்டங்களைப் பெற்றபோதும், இரவீந்திர ஜடேஜா (4), உமேஷ் யாதவ் (3), இரவிச்சந்திரன் அஷ்வின் (3) விக்கெட்டுகளைப் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 197 ஓட்டங்களைப் பெற்றது.

நான்கு போட்டிகள் கொண்ட இத்தொடரில், இந்தூரில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 109 ஓட்டங்களையே பெற்றிருந்தது.

22ஆவது படைப் பிரிவு நடாத்திய மென்பந்தாட்டத் தொடர்:

# கிண்ணியா பி.எம்.எஸ் அணி சம்பியன்




**ஹஸ்பர்**

திருகோணமலை உவர்மலை 22ஆம் இராணுவ படைப் பிரிவு ஏற்பாட்டில் நடைபெற்ற மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் கிண்ணியா பி.எம்.எஸ் அணி சம்பியனானது.

தம்பலகாமம் கோயிலடி பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கிண்ணியா, தம்பலகாமம், மூதூர் பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 43 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் கிண்ணியா ஹெவிண் லெவிண் அணியை வென்றே பி.எம்.எஸ் அணி சம்பியனானது.

சம்பியனான பி.எம்.எஸ் அணிக்கு 40,000 ஆயிரம் ரூபாய் பணப்பரிசும், கேடயமும், இரண்டாமிடம் பெற்ற ஹெவிண் லெவிண் அணிக்கு 25,000 ரூபாய் பணப்பரிசும் கேடயமும் வழங்கி வைக்கப்பட்டன.

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில்

# பங்களாதேஷை வென்ற இங்கிலாந்து

பங்களாதேஷுக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், மிர்பூரில் நேற்று முன்தினம் நடைபெற்ற முதலாவது போட்டியில் இங்கிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பங்களாதேஷ்: 209/10 (47.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: நஜ்முல் ஹொாஸைன் ஷன்டோ 58 (82), மகமதுல்லா 31 (48) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் வூட் 2/34, மொயின் அலி 2/35, ஜொஃப்ரா ஆர்ச்சர் 2/37, அடில் ரஷீட் 2/47, வில் ஜக்ஸ் 1/18, கிறிஸ் வோக்ஸ் 1/28)

இங்கிலாந்து: 212/7 (48.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: டேவிட் மலன் ஆ.இ 114 (145), வில் ஜக்ஸ் 26 (31) ஓட்டங்கள். பந்துவீச்சு: தஜியுல் இஸ்லாம் 3/54, மெஹிடி ஹஸன் மிராஸ் 2/35, தஸ்கின் அஹ்மட் 1/26, ஷகிப் அல் ஹஸன் 1/45)

போட்டியின் நாயகன்: டேவிட் மலன்

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்று முற்பகல் 11.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.






# நொர்கியாவிடம் அடிபணிந்த மேற்கிந்தியத் தீவுகள்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்டின் தமது முதலாவது இனிங்ஸில், அன்றிச் நொர்கியா (5), ககிஸோ றபாடா (2), ஜெரால்ட் கொயட்ஸீ (2), மார்கோ ஜன்சனிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 212 ஓட்டங்களையே மேற்கிந்தியத் தீவுகள் பெற்றது. துடுப்பாட்டத்தில், றேமன் றீஃபயர் 62 ஓட்டங்களைப் பெற்றார்.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், செஞ்சூரியனில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 342 ஓட்டங்களைப் பெற்றது.

ஹொங்கொங்

# அதிரடி அறிவிப்பை வெளியிட்ட ஹொங்கொங்

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக ஹொங்கொங்கின் சுற்றுலாத் துறையானது மிகவும் பாதிப்படைந்துள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் வகையில் வெளிநாட்டினருக்கு 5 லட்சம் விமான டிக்கெட்டுகளை இலவசமாக வழங்குவதாக ஹொங்கொங் அரசு அறிவித்துள்ளது.


இதற்காக, தங்கள் நாட்டிற்குள் வருவோர் கட்டாயமாக முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும் என்ற விதிமுறையைத் தளர்த்தியுள்ள ஹொங்கொங் அரசு, சிங்கப்பூர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, மலேசியா, வியட்நாம் மற்றும் கம்போடியா நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கும் இச்சலுகையை அறிவித்துள்ளது.



எனினும் தங்கள் நாட்டிற்கு வருவோர் குறைந்தபட்சம் 2 நாட்கள் தங்கியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையையும் ஹொங்கொங் அரசு விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


அலாஸ்கா

# வைரலாகும் புகைப்படம்



சூரிய கதிர்கள் வளிமண்டலத்தால் சிதறடிக்கப்படுவதால் பச்சை நிறத்தில் ஒளிவெள்ளமொன்று ஆகாயத்தில் பாயும் .

இந்நிகழ்வானது ‘அரோரா போரியாலிஸ்‘ அதாவது வட துருவ வெளிச்சம் என அழைக்கப்படுகின்றது.




குறித்த நிகழ்வானது அண்மையில் அலாஸ்காவின் ‘Anchorage ‘பகுதிகளில் தோன்றியுள்ளது.

இக்காட்சியை புகைப்படக் கலைஞர் ஒருவர் டைம்-லேப்ஸ் முறையில் காட்சிப்படுத்தியுள்ளார். குறித்த புகைப்படமானது தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

எகிப்து

# மீண்டும் திறக்கப்பட்ட அல்-ஹக்கிம் பள்ளிவாசல்



எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் உள்ள 1000 ஆண்டுகள் பழமையான அல்-ஹக்கிம் பள்ளிவாசல், கடந்த 6 ஆண்டுகளாக நடைபெற்று வந்த புனரமைப்புப் பணிகள் நிறைவுற்று மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

கெய்ரோவில் உள்ள இரண்டாவது மிகப்பெரிய பள்ளிவாசலான இது கிபி 990ல் சுமார் 14,000 சதுர மீற்றர் பரப்பளவில் கட்டப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் சுமார் 85 மில்லியன் எகிப்தியன் பவுண்ட் பட்ஜெட்டில் கடந்த 2017ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட புனரமைப்புப் பணிகள் முடிவுற்று, தற்போது மீண்டும் திறக்கப்பட்டுள்ளமை அப்பகுதி மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# தாய்ப்பால் குடிக்கும் மணமகன்:

## மணமகளுக்குத் காத்திருந்த அதிர்ச்சி

பிரித்தானியாவில் ஜோர்ஜ் என்பவருக்கும் ,ஹோஸ்ட் என்பவருக்கும் அண்மையில் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் திருமண நாள் அன்று காலை, ஜென்னி என்ற அழகுக் கலை நிபுணர் மணமகளுக்கு அலங்காரம் செய்துவிட்டு மணமகனுக்கு அலங்காரம் செய்ய அவரது அறைக்குச் சென்றுள்ளார்.

இதன்போது மணமகன் அறையில் ஜோர்ஜ் தனது தாயாரிடம் தாய்ப் பால் அருந்துவதை பார்த்து அதிர்ச்சியடைந்த அவர் இது குறித்து மணமகளிடம் தெரிவித்துள்ளார்.

இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த ஹோஸ்ட் இது குறித்து ஜோர்ஜிடம் கேள்வியெழுப்பிய போது ”தான் சிறு குழந்தையாக இருக்கும் போது ஆரம்பித்த இப் பழக்கத்தை கடைசி வரை நிறுத்தவில்லை ” எனத் தெரிவித்துள்ளார்.



இதனைக் கேட்டு அதிர்சியடைந்த ஹோஸ்ட், பின்னர் திட்டமிட்டபடியே திருமணம் செய்து கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




பெரு

# ‘மம்மி‘யுடன் வாழ்க்கை நடத்திய இளைஞர் கைது

பெருவைச் சேர்ந்தவர் ‘ஜூலியோ சீசர் பெர்மேஜோ. 26 வயதான இவர் 800 ஆண்டுகள் பழமையான மம்மியைக், காதலி என நினைத்து வாழ்ந்து வந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பூங்காவொன்றில் ஒரு பையுடன் சந்தேகத்துக்கு உரிய வகையில் அவர் நடமாடுவதை அவதானித்த பொலிஸார் அவரிடம் விசாரணை மேற்கொண்ட போதே இச்சம்பவம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

விசாரணையில் ” குறித்த பையில் இருந்த மம்மியைத் தனது காதலி எனக் கூறிய அவர், அதனைத் தனது நண்பர்களுக்குக் காண்பிப்பதற்காக பூங்காவுக்கு எடுத்து வந்தாகக் கூறியுள்ளார்.

> **சுமார் 600 முதல் 800 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது. இதனையடுத்து குறித்த நபரைக் கைது செய்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்**


மேலும் சுமார் 30 ஆண்டுகளாகக் குறித்த மம்மி ,அவரது வீட்டில் இருப்பதாகவும், அதனுடன் தான் தூங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அதனை 30 ஆண்டுகளுக்கு முன்னர் தனது தந்தை வீட்டிற்குக் கொண்டுவந்துள்ளார் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மம்மியைப் பறிமுதல் செய்து நடத்தப்பட்ட பரிசோதனையில், அந்த மம்மி சுமார் 45 வயது மிக்க ஆண் என்பது தெரியவந்துள்ளது.

மேலும் சுமார் 600 முதல் 800 ஆண்டுகள் பழமையானதாக இருக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த நபரைக் கைது செய்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



பிரித்தானியா

# டுவிட்டருக்குப் போட்டியாகக் களமிறங்கும் ‘ப்ளூஸ்கை‘

உலகின் மிகப்பெரும் செல்வந்தரும், டெஸ்லா ,ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகருமான எலோன் மஸ்க் (Elon musk), அண்மையில் டுவிட்டரைக் கைப்பற்றியிருந்தார்.

இதனையடுத்து ட்விட்டரின் இணை நிறுவனரும், முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரியுமான ஜாக் டோர்சி, தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார்.

இந்நிலையில், அவர் தற்போது டுவிட்டருக்கு போட்டியாக புதிதாக ‘ப்ளூஸ்கை‘ என்ற சமூக வலைதள செயலியை அறிமுகப்படுத்தியுள்ளார்.

அப்பிள் இயங்குதளத்தில் சோதனை முயற்சியாக வெளியிடப்பட்டுள்ள இந்த செயலியானது, விரைவில் அண்ட்ரொய்டு இயங்குதளத்திலும் வெளியிடப்படும் என எதிர்ப்பாக்கப்படுகின்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 03 மார்ச் 2023, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.